பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 243

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பத்தாவது பாராளுமன்றம்

முதலாவது கூட்டத்தொடர்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

இரண்டாவது அறிக்கை

(2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அரவிந்த செனரத் அவர்களால் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கைப் பாராளுமன்றத்தால் 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிடப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டது.

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் மீதான அவதானிப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தல்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் 119(4)ஆம் இலக்க நிலையியற் கட்டளையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

“அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கையையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச்சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்.”

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அமைப்பு

1. கௌரவ அரவிந்த செனரத் (தவிசாளர்)
2. கௌரவ எண்டன் ஜயகொடி
3. கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேக்கர
4. கௌரவ சுகத் திலகரத்ன
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப் (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
6. கௌரவ நலீன் ஹேவகே
7. கௌரவ கபீர் ஹாஷிம் (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
8. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
9. கௌரவ ரோஹித அபேகுணவர்தன (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
10. கௌரவ ஜே.சி.அலவத்துவல (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
11. கௌரவ சாமர சம்பத் தசநாயக்க (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
12. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
13. கௌரவ கவிந்த ஹேஷான் ஜயவர்தன (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
14. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன் (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
15. கௌரவ (சட்டத்தரணி) திருமதி. சாகரிகா அதாவுத
16. கௌரவ மஞ்சுல சுரவீர ஆரச்சி
17. கௌரவ கே.இளங்குமரன்
18. கௌரவ திருமதி. ஒஷானி உமங்கா
19. கௌரவ அஜந்த கம்மெத்தகே (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
20. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி
21. கௌரவ (சட்டத்தரணி) திருமதி. துஷாரி ஜயசிங்ஹ (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
22. கௌரவ ரீ.கே. ஜயசுந்தர (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
23. கௌரவ எம்.ஏ.எம்.தாஹிர் (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
24. கௌரவ சுசந்த குமார நவரத்ன
25. கௌரவ லால் பிரேமநாத்
26. கௌரவ சானக மாதுகொட (2025.03.21ஆம் திகதி தொடக்கம்)
27. கௌரவ சுனில் ரத்னசிரி (2025.05.08 ஆம் திகதி தொடக்கம்)
28. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க
29. கௌரவ சந்தன சூரிய ஆரச்சி
30. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன

<u>குழு அலுவலகத்தின் பணியாட்தொகுதி</u>

- திருமதி.காந்தி பீரிஸ் - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) குழுவின் செயலாளர்
- திரு. சனத் விஜேகுணவர்தண - பிரதான அலுவலர்
- திரு. ஆர்.ஏ.டி.என்.கியோவனி - பிரதிப் பிரதான அலுவலர்
- திரு.ஜே.ரீ.எல்.பீ.சமீர - உதவிப் பிரதான அலுவலர்
- செல்வி.ஜி.டீ.ஜே.எச்.அயேஷ்மந்தி - பாராளுமன்ற அலுவலர்
- திருமதி.ஜீ.எம். கல்லேகொட - பாராளுமன்ற அலுவலர்

<u>குழு அறிக்கைகள்</u>

www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பயன்படுத்தி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெளியீடுகளை தரவிறக்கம் செய்யலாம்.

Select language → Business of Parliament → Committees
→ Committee Reports → Select Legislature (10th Parliament)
→ Select Session (1st Session) → Select Committee Type (Comittees for Special Purposes)
→ Select Committee (Committee on Public Accounts) → Search

உள்ளடக்கம்

அ. தவிசாளரின் குறிப்பு.. 6

ஆ. சுருக்க அறிக்கை 9

இ. பின்னணி மற்றும் அறிக்கை 11

ஈ. விசாரணையின்போது அவதானிக்கப்பட்ட விடயங்கள்........... 25

உ. குழுவின் விதப்புரைகள்... 27

ஊ. இணைப்புக்கள் 30

தவிசாளரின் குறிப்பு

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு 2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் சம்பந்தமாக பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் 119(3) ஆம் இலக்க கட்டளையின் ஏற்பாடுகளின்படி மேற்கொண்ட விசாரணைகள் அடங்கிய குழுவின் இரண்டாவது அறிக்கையை நான் இன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 148ஆம் உறுப்புரையின்படி இலங்கைப் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரச நிதிக் கட்டுப்பாட்டுத் தத்துவங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் மூலமாக வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி நிதிசார் மேற்பார்வை குழுவாக செயலாற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, பொதுமக்களின் செலவுகளுக்காக பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை காட்டுகின்ற கணக்குகள் மற்றும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு உகந்தது என கருதக்கூடியதும் பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்படுவதுமான ஏனைய கணக்குகள் மீதான பரிசீலனையை முக்கிய பணியாகக் கொண்டுள்ளது.

மேற்படி பணியை நிறைவேற்றும்போது கணக்காய்வு எனப்படும் பின்னரான செயல்முறையின் ஊடாக குழுவிற்கு கிடைக்கும் பங்களிப்பு அளப்பரியது. அதாவது, முறையான கணக்காய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பலவீனங்களுக்கு தீர்வுகள் வழங்கப்படுகிறன. மேலும், வினைத்திறனின்மையை முனைப்பாக தடுக்க, எதிர்காலத்தில் கடந்தகால குறைபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள நிறுவனங்களுக்கு அவசியமான வழிகாட்டலும் இதன்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனம் தொடர்பாக கடந்த 2012ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள மிகத் தெளிவான கணக்காய்வு விதப்புரைகளுக்கு அமைவாக குறித்த நிறுவனம் இதுவரை செயலாற்றத் தவறியுள்ளதை மிகவும் பாரதூரமான விடயமாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கருதி உள்ளமையும், அதற்கு மேலதிகமாக நிறுவனத்தில் மிகத் தெளிவாக இனங்காணப்பட்ட ஏராளமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதை இந்த விசாரணையின்போது குழு

அவதானித்துள்ளமையும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் சம்பந்தப்பட்டதாக மாத்திரம் மிக விரைவில் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்த காரணங்களாக அமைந்தன.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, சிறந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப கட்சி பேதமின்றி, முன்னரை விட அதிக அர்ப்பணிப்புடன் செயல்படுவது அரசியல் அதிகாரத்தாரின் பொறுப்பாகும் என்பதையும், அரசாங்க நிறுவனங்களில் நிதி முறைகேடுகளையும் ஊழலையும் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் பொறுப்பாகும் என்பதையும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் என்ற வகையில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அவ்வாறே, அரச நிறுவனங்களின் நிதி ஒழுக்கம் மற்றும் செயலாற்றுகையை மேம்படுத்த குழுவினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வீணாகாமல் இருப்பதற்கு அரசியல் அதிகாரத்தார் மற்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதையும் இங்கு குறிப்பாக தெரிவிக்க வேண்டியுள்ளது. குழுவின் விதப்புரைகளையும் கட்டளைகளையும் நடைமுறைப்படுத்துவது குறித்து உடனடியாக கவனம் செலுத்துதல், தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் அத்துடன் அனைத்து நடவடிக்கைகளையும் பின்னாய்வு செய்து, தொடர்புடைய விதப்புரைகள் / கட்டளைகளை நடைமுறைப்படுத்தல் பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாவதுடன் அதற்கு அப்பாற்பட்ட குற்றவியல் தவறுகளுக்கு சட்டத் துறை தலைமை அதிபதியின் இடையீட்டுடன் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசியல் அதிகாரத்தாரின் பொறுப்பாகும். எனவே, இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் பொருத்தமான பிரேரணை நிறைவேற்றுவதன் மூலம் தகுந்த சட்ட நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்த அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு எதிர்ப்பார்க்கின்றது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றி அதற்கு பங்களிக்கும் அனைத்து தரப்பின் ஒத்துழைப்பில் தங்கியுள்ளது. எனவே, அரசாங்க நிதிப் பொறிமுறையை வலுப்படுத்த அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு இதுவரையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்காக கடந்தகால குழுக்களில் பணியாற்றிய தவிசாளர்கள் உட்பட அங்கத்துவ உறுப்பினர்களுக்கும், குழுவின் பணிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு கட்சி பேதமின்றி எனக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் தற்போதைய அங்கத்துவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும்கூட குழுவின் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு வழங்கிவரும் ஒத்துழைப்பிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பணியாட்டொகுதிக்கும், பொதுத் திறைசேரியின் அலுவலர்களுக்கும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உட்பட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அனைத்து அலுவலர்களுக்கும் குழு தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது என்பதை இத்தால் தெரிவிக்கின்றேன்.

அரவிந்த செனரத்
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

சுருக்க அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தில் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஏற்புடையததாக கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதம கணக்கீட்டு அலுவலர்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுப்படுத்தல்கள், குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் விதப்புரைகளை இந்த அறிக்கை கொண்டுள்ளது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2025.03.10 மற்றும் 2025.03.21ஆகிய இரண்டு நாட்களில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆகிய நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கும் நிகழ்கால செயலாற்றுகைகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கும் பின்வரும் நிறுவனங்கள் குழுமுன் அழைக்கப்பட்டன.

- போக்குவரத்து,நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு
- மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

இந்த விசாரணையில் மேற்கூறப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் மூலமாக வெளிக்கொண்டுவரப்பட்ட விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டதுடன், குழுக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய மேலதிக தகவல்கள் அந்தக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தக் கணக்காய்வு அறிக்கைகளை பின்வரும் தொடர்பின் வழியாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

2020ஆம் ஆண்டு:-
http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2020/Min_Dep/1-x/Head307Department-of-Motor-TrafficS.pdf

2021ஆம் ஆண்டு:-
http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2021/MinDep/1-ix/Head307Department-of-Motor-TrafficS.pdf

2022ஆம் ஆண்டு:-
http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2022/mindepart/1-xx/Head307Department-of-Motor-TrafficS.pdf

2023ஆம் ஆண்டு:-

http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2023/min_dep/1-ix/Head307-Department-of-Motor-TrafficS.pdf

"சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஒன்றுகூட்டப்பட்ட வாகனங்களின் அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் என்ஜின் இலக்கங்களை மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் தரவுத் தளத்தில் மோசடியான முறையில் பதிவேற்றி போலியான மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கியமை பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை-2022" எனப்படுகின்ற 2023.09.12 ஆம் திகதிய விசேட கணக்காய்வு அறிக்கை

http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2023/special_report/Special-Audit-Report---RMV-Final-with-sign-Printed-13.09.2023.pdf

பின்னணியும் அறிக்கையும்

2012 ஆம் ஆண்டு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக கணக்காய்வின்போது வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் பற்றி 2014 ஆம் ஆண்டு முன்னிலைப்படுத்தப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் தரப்பட்டுள்ள விதப்புரைகள், பின்தொடர் நடவடிக்கைகள் பலவற்றின் பின்னரும் நடைமுறைப்படுத்தப்படாமை காரணமாக அது பற்றி 2023.10.23 ஆம் திகதி நடத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குழுவினால் ஏற்புடைய விதப்புரைகள் வழங்கப்பட்டிருந்தன.

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் இதுவரை அத்தகைய எந்தவொரு விதப்புரையையும் நடைமுறைப்படுத்தாமை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் சம்பந்தமாக 2023.09.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையிலுள்ள விதப்புரைகளையும் இதுவரையில் நடைமுறைப்படுத்தாமை அத்துடன் குறித்த விதப்புரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தாமை குறித்து ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயங்களை முன்வைப்பதற்கோ அல்லது முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கோ திணைக்களத் தரப்பினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோல், திணைக்களத்தின் செயலாற்றுகை நாளுக்கு நாள் வினைத்திறனற்றுப்போவதை 2020, 2021, 2022 மற்றும் 2023 நிதி ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைள் பிரதிபலித்துள்ளமை மற்றும் நாளுக்கு நாள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவை வழங்கல் பற்றி சமூகத்தில் நிலவும் பொதுமக்களின் அதிருப்தி நிலை மேலோங்கி உள்ளமை ஆகிய காரணங்களினால் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளையும் தற்போதைய செயலாற்றுகையையும் ஆராய்வது காலத்திற்கு பொருத்தமானது எனத் தீர்மானித்த குழு, திணைக்களம் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் ஆகியவற்றின் அலுவலர்களை 2025.03.10 ஆம் திகதி 10 ஆவது பாராளுமன்றத்தில் முதலாவது தடவையாக குழுமுன் தோன்றுமாறு அழைத்திருந்தது.

அதன்போது, 23.10.2019 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த, சங்கத்தின் கணினி முறைமையுடன் இணைக்கப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற சட்டவிரோத வாகனப் பதிவுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்பட்ட 25 விடயங்கள் பற்றி திணைக்களத்தால் நடத்தப்பட்ட விசாரணைகள் குறித்தும், அந்த மோசடியான நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அலுவலர்ளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 12.09.2023 ஆம் திகதியன்று

சமர்ப்பிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ள விடயங்களின் தற்போதைய முன்னேற்றம் குறித்து முதலில் ஆராய்ந்தது.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு விதப்புரைகள் தொடர்பாக திணைக்களம் எதுவித சாதகமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், குழுவின் விசாரணைகளை திசைதிருப்பும் நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட காலத்துக்குரிய கோப்புகள் தற்போது நிறுவனத்தில் இல்லை எனவும், தான் திணைக்களத்தில் இணைக்கப்படுவதற்கு முன்னர் குறித்த முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகவும், கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்களை மேலும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த திணைக்கள விசாரணை குழுக்களின் அலுவலர்கள் உரிய காலப்பகுதியினுள் விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்காது பின்னர் பணியிட மாற்றம் பெற்றுச் சென்றதால் அந்த விசாரணைகள் வெற்றியளிக்கவில்லை போன்ற பொறுப்பற்ற கூற்றுக்கள் முன்வைக்கப்படுவதை அவதானித்த குழு, இந்த திணைக்களம் தொடர்பான மேலதிக விசாரணை ஒன்றை எதிர்வருகின்ற ஒரு நாளில் மேற்கொள்ள வேண்டும் எனவும், குறித்த விசாரணைக்கு சம்பந்தப்பட்ட அறிக்கைகளுக்குரிய காலப்பகுதியினுள் திணைக்களத்தில் பணியாற்றியவர்களும் தற்போது பணியிட மாற்றம் பெற்றுள்ளவர்களும் / ஓய்வுபெற்றுள்ளவர்களுமான தலைமை அதிபதிகள், திணைக்களத்தின் விசாரணைக் குழுவில் இதற்கு முன்னர் கடமையாற்றி, தற்போது பணியிட மாற்றம் பெற்றுள்ள அலுவலர்கள் மற்றும் இந்த விசாரணை தொடர்பாக ஏதேனும் வகையில் விடயங்களை முன்வைக்கக் கூடிய திணைக்களத்தில் அல்லது அமைச்சின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் காணப்படுவாராயின், அவ்வாறான அலுவலர் அல்லது ஊழியரை அடுத்த கூட்டத்திற்கு அழைக்க வேண்டுமென குழு முடிவு செய்தது.

அந்த தீர்மானத்தின்படி, 2025.03.21 ஆம் திகதி இரண்டாவது முறையாக கூடிய குழு, அன்றும் முதலாவது விடயமாக 2019.10.23 ஆம் திகதிய நடத்தப்பட்ட குழுவில் வழங்கப்பட்ட விதப்புரைகளின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்தது. அதன்போது, திணைக்களத்தின் தற்போதைய அலுவலர்கள் குழுவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான பதில்களை அளிக்கத் தவறினர். இருப்பினும், மார்ச் 2020 தொடக்கம் ஆகஸ்ட் 2022 வரை திணைக்களத்தில் பணியாற்றிய தலைமை அதிபதி இந்த 25 விடயங்கள் தொடர்பான தகவல்களை வெளிக்கொணர்ந்ததன் பயனாக, அதனுடன் சம்பந்தப்பட்ட 118 கோப்புகளை இனங்காணல், திணைக்கள தரவுத் தளத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேலதிக பாதுகாப்பு வழிமுறைகளை நிறுவுதல், அவரது கண்டுப்பிடிப்புகளை அடிப்படையாக் கொண்டு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நிதிக் குற்ற விசாரணைத் திணைக்களத்தின்(FCID) கணினி தடயவியல் பிரிவிற்கும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கும் இரண்டு தனித்தனி முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை குழு அவதானித்தது.

எவ்வாறாயினும், மேற்படி ஆணையாளர் தலைமை அதிபதி பணியிடம் மாற்றம் செய்யப்பட்டதன் பின்னர் சாதகமான அத்தகைய நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதை மேலும் அவதானித்த குழு, கீழே தரப்பட்டுள்ளதும் மிகவும் பாரதூமானதாக கருதப்படுகின்றதுமான நிதி மோசடிகள் மற்றும் குற்றவியல் விடயங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியதுடன் மிக நீண்டதொரு காலம் கடந்திருப்பினும் அந்த மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானித்தது. ஓய்வுபெற்ற நீதிபதிகள், கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிலையிலிருந்து ஓய்வுபெற்ற அலுவலர்கள் மற்றும்/ அல்லது மூன்று அல்லது ஐந்து ஓய்வுபெற்ற அரச அலுவலர்கள் அடங்கிய ஒரு சுயாதீன விசாரணைக் குழு ஊடாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், குறித்த சுயாதீனக் குழு மீண்டும் இது பற்றிய முழுமையான விசாரணையை நடாத்தி, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகத் தேவையான பூர்வாங்க விதப்புரைகளை குற்றப்பத்திரிகைகளுடன் சமர்ப்பித்து, அடுத்தக் கட்ட ஒழுக்காற்று நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் எனவும் குழு முடிவுசெய்தது. மேலும், இவ்விடயம் தொடர்பான முன்னைய விசாரணையில், அதாவது 2020ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட 118 கோப்புகளுடன் தொடர்புடைய விசாரணை அறிக்கையைப் பெற்று அந்த விசாரணையின் முன்னேற்றம் குறித்து குழுவால் ஆராயப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

<u>கணக்காய்வு அவதானிப்புக்களாக இனங்காணப்பட்டிருந்த 2019.10.23 ஆம் திகதி நடைபெற்ற குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட விதப்புரைகளுடன் தொடர்புடைய 25 விடயங்கள்:-</u>

(மேலதிக விபரங்கள் இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளன.)

1. மத ஸ்தலங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட 158 வாகனங்களின் அனுமதிப்பத்திரதாரர்களின் பெயர் அல்லது அனுமதிப்பத்திரத்திற்குரிய ஒப்படைத்தல் பற்றிய நிபந்தனைகள் மாற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டிருத்தல் மற்றும் 120 வாகனங்களின் உற்பத்தி வருடத்தையும் மாற்றி பதிவு செய்யப்பட்டிருந்தது.

2. பயன்படுத்தப்பட்ட இரு சக்கர உழவு இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுங்கக் குறிப்புகளுக்குரியதான பொதியிடற் பட்டியல்கள் (Packing List) உண்மைக்கு மாறாக மாற்றம் செய்யப்பட்டு சுங்கத் தீர்வை செலுத்தாமல் இந்நாட்டுக்கு இறக்குமதி

செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 302 இரு சக்கர உழவு இயந்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

3. மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்ட 5 சுங்கக் குறிப்புக்களை உபயோகித்து சுங்க தீர்வை செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட டொயோட்டா எலியோன், பிரிமியோ, டொயோட்டா கொரொல்லா மற்றும் எக்ஸியோ வகைகளைச் சேர்ந்த 5 வாகனங்கள் உண்மைக்கு மாறாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

4. பிரிதான மோட்டார் வாகனங்களுக்குரிய 05 சுங்கக் குறிப்பு இலக்கங்களை உண்மைக்கு மாறான வகையில் பயன்படுத்தி டொயோட்டா லேன்ட் குரூஸர், பிராடோ வகையைச் சேர்ந்த 02 ஜீப் வாண்டிகள், மிட்ஷுபிஸி மொன்டேரோ வகையைச் சேர்ந்த 02 ஜீப் வண்டிகள் மற்றும் 4 மர்ஸிடீஸ் பென்ஸ் வாகனங்கள் உட்பட 18 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

5. சுங்கத் திணைக்களத்தினால் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு வாகனங்களைப் பதிவு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் மாற்றத்திற்கு உட்படுத்த முடியாத வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட கணினி வலையமைப்பு முறைமையொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

6. இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் உற்பத்தி வருடம், உற்பத்தி செய்த நாடு மற்றும் சிலின்டர் கொள்ளளவு உள்ளிட்ட முக்கியமான தகவல்கள் சுங்கக் கணினி வலையமைப்புடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்காத காரணத்தினால் மேற்படி தகவல்கள் மாற்றஞ் செய்யப்பட்டு மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன.

7. சேவையிலிருந்து அகற்றப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் இலக்கத் தகட்டினைப் பயன்படுத்தி, சுங்கத் தீர்வை செலுத்தப்படாமல் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட மிட்ஷுபிஸி மொன்ட்டெரோ வகையைச் சேர்ந்த ஜீப் வாண்டியொன்றும் சுங்கத் தீர்வை செலுத்தப்படாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஹமர் வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

8. மில்லட் மாதிரியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 164 உழவு இயந்திரங்கள் மெஸிபர்கியுஷன் மாதிரியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தன.

9. மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வேறு வகையான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட சுங்கக் குறிப்புக்களைப் பயன்படுத்தி BMW, டொயோட்டா, பிராடோ மற்றும் மர்ஸிடீஸ் பென்ஸ் உள்ளிட்ட 8 அதி சொகுசு மோட்டார் கார்கள் உட்பட 26 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

10. 2013 ஏப்ரல் 04ஆம் திகதியின்போது கணினி முறைமையில் காணப்பட்ட ஒரு வாகனம் தொடர்பான தகவல்களுக்கமைய மேற்படி வாகனம் 2004 ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஏப்ரல் 18ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது அது 2007ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டதாக தவறான முறையில் தரவுகள் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

11. P மற்றும் L எழுத்துத் தொகுதிகளின் கீழ் முறையே இரட்டைப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் மோட்டார் லொறிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்ட போதிலும், இவ்வெழுத்து தொகுதிகளின் கீழ் ஐந்து கதவுகள் கொண்ட 24 சொகுசு ஸ்டேஷன் வெகன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த 24 வாகனங்களும் கெப் மற்றும் டிபென்டர் வகை வாகனங்களாக இறக்குமதி செய்யப்பட்டு, பின்னர் ஐந்து கதவுகள் கொண்ட ஸ்டேஷன் வெகன் வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

12. கானெட் அனுமதிப்பத்திரத்தின் (Carnet Permit) அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்கள் மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்ற போதிலும், அவ்வாறான 8 மோட்டார் வாகனங்கள் முறையற்ற விதமாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

13. CMBV 1 - 570 மற்றும் CMBV 1 – 207 ஆகிய இலக்கங்களைக் கொண்ட இறக்குமதி சுங்கக் குறிப்புக்கள் ஊடாக 8 லேன்ட் ரோவர் கெப் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அவற்றுள் 2 வாகனங்கள் மோட்டார் கார் தொகுதியின் கீழான இரண்டு சொகுசு ஜீப் வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. இதற்கு அமைவாக குறைந்த சுங்கத் தீர்வை சேர்வை இலக்கத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் மோட்டார்கார், ஜீப் வாகனங்கள், வேன் மற்றும் டபள் கப் வாகனங்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

14. 2009.12.29 ஆம் திகதிய CMBV 1 – 5636 ஆம் இலக்க சுங்கக் குறிப்பு மற்றும் சேர்வை இலக்கம் 8706 ஊடாக வாகன உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டு, அவ்வுதிரிப் பாகங்களைப் பொருத்தி 23 வாகனங்கள் தயாரிக்கப்பட்டு, மேற்படி சுங்கக் குறிப்பினை மாற்றியமைத்து இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

15. சுங்க திணைக்களத்தின் தகவல்களின் படி கப் வகை வாகனமாக சுங்கத் தீர்வை செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த 3 வாகனங்கள் மோட்டார் கார்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

16. சுங்க சேர்வை இலக்கம் 8403 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட நோயாளர் காவு வாகனமாக பதிவு செய்யப்பட்டிருந்த வாகனத்தை நேரில் சென்று பரிசோதித்த போது சொகுசு ஜீப் வாகனமாக அவதானிக்கப்பட்டது. அத்துடன் நோயாளர் காவு வாகனமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்த 2 வாகனங்கள் இரட்டைப் பயன்பாட்டு வாகனமாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

17. 120 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 72 சுங்கக் குறிப்புக்கள் மூலம், 1977 மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், எந்தவொரு மோட்டார் சைக்கிளும் இறக்குமதி செய்யப்படாத 7 சுங்கக் குறிப்புக்கள் மூலம் 2098 மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், தவறாக/மோசடியான முறையில் குறிப்பிடப்பட்டு 3955 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

18. 2014 யூன் 02 தொடக்கம் யூன் 06 வரையான காலப்பகுதியினுள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த, பயன்படுத்தப்பட்ட 108 மோட்டார் சைக்கிள்கள் சுங்கத் திணைக்களத்தின் கணினி முறைமையின் தகவல்களுடன் பொருந்தவில்லை.

19. ஒரே மாதிரியான இரண்டு மிட்ஷுபிஸி வெகன் வகையைச் சேர்ந்த இரண்டு வாகனங்கள் இரண்டு வகுப்புக்களின் கீழ், அதாவது KN - 4062 மற்றும் PG - 7755 என முறையே மோட்டார் கார் மற்றும் இரட்டைப் பயன்பாட்டு வாகனமாக பதிவு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த வேன் ஒன்று KN - 3916 என்ற மோட்டார் கார் இலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

20. K எழுத்துத் தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய 13 மோட்டார் கார்கள் PP தொடக்கம் PY எழுத்து தொகுதியின் கீழ் இரட்டைப் பயன்பாட்டு வாகனமாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மோட்டார் கார்களாக பதிவு செய்யப்பட வேண்டிய 4 வாகனங்கள் PA தொடக்கம் PM என்ற வாகனங்களை அடையாளம் காணும் எழுத்துத் தொகுதியின் கீழ் டபள் கப் வண்டிகள் மற்றும் வேன்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. மேலும் மோட்டார் கார்களாக பதிவு செய்யப்பட வேண்டிய 4 வாகனங்கள் மோட்டார் லொறிகளாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

21. PV - 9789 மற்றும் PR - 1900 என்ற இலக்கங்களின் கீழ் முறையே ஒரு ட்ரக் வண்டி மற்றும் ஒரு சிங்கல் கெப் வாகனமாகப் பதிவு செய்யப்பட்டிருந்த இரண்டு வாகனங்களும் நேரடிப் பரிசோதனையின் போது, அவை லேன்ட் ரோவர் டிபென்டர் வகையைச் சேர்ந்த டபள் கெப் வாகனங்கள் என்பது கண்டறியப்பட்டது. இந்த வாகனங்கள் குறைந்த சுங்கச் சேர்வை இலக்கங்களின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு, பின்னர் சொகுசு கெப் வாகனங்களாக மாற்றப்பட்டிருந்தன.

22. (i) சுங்கச் சேர்வை இலக்கம் 8705 இன் கீழ் 7% என்ற ஆகக் குறைந்த சுங்கத் தீர்வையைச் செலுத்தியும் மற்றும் 7 ஆண்டுகள் பழையதுமான, சிறப்பு நோக்கங்களுக்கான வாகனங்களாக இறக்குமதி செய்யப்பட்ட 78 வாகனங்கள், சுங்கச் சேர்வை இலக்கம் 8704 இன் கீழ் 85% - 115% வரை சுங்கத் தீர்வை செலுத்த வேண்டிய 22 இரட்டைப் பயன்பாட்டுக் கார்கள், வேன்கள் மற்றும் 56 மோட்டார் லொறிகள் என்றவகையில் மோசடியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக பாரிய வரி வருமானத்தையும் பதிவுக் கட்டண வருமானத்தையும் அரசாங்கம் இழந்திருந்தது.

(ii) மேலே பந்தி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 2010.01.01 முதல் 2013.10.31 வரையில் சுங்கச் சேர்வை இலக்கம் 8705 இன் கீழ் சிறப்பு நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட 540 வாகனங்களுள் 93 வாகனங்கள் இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களாகவும், மேலும் 358 வாகனங்கள் மோட்டார் கார்களாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக சுமார் 6 மில்லியன் ரூபாய் பதிவுக் கட்டண வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்தது.

(iii) மோட்டார் போக்குவரத்து, சுங்கம் மற்றும் கணக்காய்வாளர் தமைமையதிபதி ஆகிய திணைக்களங்களைச் சேர்ந்த

உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2014.07.23ஆம் திகதி ஒரு கலந்துரையாடல் நடாத்தப்பட்டு, அக்கலந்துரையாடலில் இணங்கப்பட்ட/தீர்மானிக்கப்பட்டவாறு கீழ்வரும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்குத் அறிவித்திருந்த போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- சிறப்பு நோக்க வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவதை கட்டாயமாக்குதல்.
- இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்வதற்கு முன், வாகனங்களுக்கு முறையாக வரி விதிக்கப்பட்டுள்ளதா என்பதை சுங்கத்தின் உற்பத்தி வரிப் பணிப்பாளரிடமிருந்து உறுதிப்படுத்தல் பெற்றுக்கொண்டதன் பின்னர் மாத்திரமே அவற்றைப் பதிவு செய்ய வேண்டுமென.
- இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோசடியாக/ உண்மைக்கு மாறாக கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாகனங்களினால் இழக்கப்பட்ட வரிப் பணத்தை அறவிட்டுக்கொள்வதற்காக அந்த வாகனங்கள் பற்றிய தகவல்களை சுங்கத் திணைக்கள உற்பத்தி வரி பணிப்பாளருக்கு வழங்க வேண்டும்.

23. சிங்கல் கெப் வண்டிகளாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு, பின்னர் ஜீப் வண்டிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ள 18 வாகனங்களுக்கான சொகுசு வரியாக ரூபா 4,320,000 அறவிடப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறு அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

24. மோட்டார் வாகனமொன்று விபத்துக்குள்ளாகி அல்லது இயற்கைக் காரணங்களினால் அல்லது வேறு காரணங்களினால் முழுமையாக அழிவடையும் பட்சத்தில், அது தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அறிக்கையிடும் முறைமையொன்று காணப்படாமையால் அவ்வாறான வாகனங்கள் கறைநிரற் பட்டியலிடப்படுவதில்லை (Black List) என்பது அவதானிக்கப்பட்டது. இந்த வாகன இலக்கங்களை பயன்படுத்தி மோசடியாக பொருத்தப்பட்ட அல்லது

வேறு வகையில் அமைத்துருவாக்கப்பட்ட வாகனங்களின் தகவல்களை உள்ளடக்கி பதிவுச் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டிருந்தன.

25. 2004.08.16 ஆம் திகதி இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த, 2001 ஆம் ஆண்டு கொரியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஹைஉன்டாய் (Hyundai) வகையிலான வாகனம், 2011 ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தில் உற்பத்தி செய்யப்பட்ட லேன்ட் ரோவர் டிபென்டர் (Land Rover Defender) வகையிலான வாகனமாக 11 வருடங்களின் பின்னர் அதாவது, 2015.07.22 ஆம் திகதியளவில் CAI – 0469 எனும் இலக்கத்தின் கீழ் திணைக்களத்தினால் மோசடியாக/ போலியாக பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் வர்த்தக வாகனப் பதிவுப் பிரிவின் உதவி ஆணையாளர் விடுமுறை பெற்றிருந்த தினமாகிய அன்றைய தினத்தில் மேற்படி உத்தியோகத்தரின் பதில் கடமைகளை நிறைவேற்றிய மோட்டார் கார்களை சாட்டுதல் செய்யும் பிரிவின் பிரதி ஆணையாளர் இப்பதிவை மேற்கொண்டிருந்தார் என்பதுடன் மேற்படி ஆவணக்கோப்பு இதுவரையில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அதனையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2023.09.12 ஆம் திகதியைக் கொண்டதாக சமர்ப்பிக்கப்பட்ட 2022 விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாகவும் புலனாய்வு செய்த குழு, திணைக்கள மட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் மோசடிகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய எந்தவொரு அலுவலருக்கும் இதுவரை தண்டனை வழங்கியிருக்கவில்லை என்பதனால் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வகையிலும் திருப்தியடைய முடியாது என்பதனை சுட்டிக்காட்டிதோடு, மேற்படி விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பான விசாரணையையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வுநிலை நீதிபதிகள் மற்றும் ஓய்வுநிலை அரச ஊழியர்களை உள்ளடக்கிய விசேட விசாரணைக் குழுவிடம் ஒப்படைக்குமாறு விதப்புரை வழங்கப்பட்டது.

இதன் போது, திணைக்களம்சார் விசாரணைக் குழுவுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் மேற்படி நியமனக் கடிதங்களினதும், தாபன விதிக் கோவையினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக தமது தொழில்சார் கடமைகளை நிறைவேற்றாமை தொடர்பில் கவனம் செலுத்திய குழு, மேற்படி அலுவலர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றாமை தொடர்பான விசாரணையொன்றினை மேற்கொண்டு குழுவுக்கு அறிக்கையிடுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கியது.

அதனையடுத்து, மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகை விசாரணையானது கீழ்வரும் விடயங்களையும் கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

(மேலதிக விபரங்கள் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ளன)

1. அப/16/1307/709/061 ஆம் இலக்க மற்றும் 2016 செத்தெம்பர் 07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய சட்டபூர்வமான சுங்கச் செயன்முறையின்றி இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கில்களை எரிபொருள் கொள்ளளவை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு உட்பட்டதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யும்போது இடம்பெற்றுள்ள முறைகேடுகள் காரணமாக அரசாங்கம் 78,150,000/- ரூபா வருமானத்தை இழந்துள்ளமை மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்தை மீறும் வகையில் 3088 மோட்டார் சைக்கில்கள் சலுகைக் காலத்தின் பின்னர் பதிவு செய்யப்பட்டுள்ளமை.

2. முன் வாகனப் பதிவு இலக்கங்களின் கீழ் முறைமைப்படுத்தப்பட்ட அடிச்சட்டக (செசி) இலக்கம் மற்றும் என்ஜின் இலக்கங்களில் மாற்றங்களைச் செய்து மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் என்ஜின் இலக்கங்களையும், அடிச்சட்டக (செசி) இலக்கங்களையும் உள்ளடக்கியதாக மோசடியாக மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 134 வாகனங்களைப் பதிவு செய்தமையினூடாக அரசாங்கம் 1.2 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளமை.

3. பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வெற்று இலக்கங்களுக்கு மோசடியாக மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கம் 6.2 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளமை.

4. இரத்துச் செய்யப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திர வாகன இலக்கங்களுக்கு வேறு வாகனங்களைப் பதிவு செய்ததன் மூலம் அரசாங்கம் ரூபா 122 மில்லியன் வருமானத்தை இழந்துள்ளமை.

5. வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு இலக்க ஒழுங்குவரிசையில் விநியோகிப்பதற்குப் பதிலாக சில இலக்கங்களை வெற்றிடமாக வைத்து வாகனங்களைப் பதிவு செய்ததன் மூலம் 5 வாகனங்களுக்காக 4.6 மில்லியன் ரூபா தொகையை அரசாங்கம் இழந்துள்ளமை.

6. மோட்டார் வாகனமொன்று மாற்றியமைப்பதென்ற போர்வையில் சட்டத்துக்கு புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்வதற்காக 538 வாகனங்களின் அடிச்சட்டக இலக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை, 2022 ஆம் ஆண்டில் பெட்ரல் வாகனங்களை டீசல் வாகனங்களாக மாற்றியமைக்கின்ற போது சட்டத்துக்கு புறம்பாக இறக்குமதி செய்யப்பட்ட 27 வாகனங்களின் அடிச்சட்டக இலக்கங்கள் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை மற்றும் பெட்ரல் வாகனங்களை டீசல்

வாகனங்களாக மாற்றியமைப்பதற்காக 130 வாகனங்களின் பழைய வாகன இலக்கங்கள் முறைமைக் கட்டமைப்பிலிருந்து அகற்றப்படாதுள்ளமை.

7. போலி ஆவணங்களைத் தயார் செய்தமை தொடர்பாக முறையான விசாரணையொன்றினை மேற்கொள்ளாமை மற்றும் அது தொடர்பில் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

8. முன் பதிவு எதுவுமின்றி முப்படையினர் பயன்படுத்தியதன் பின்னர் அகற்றப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தமை.

9. குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த வேரஹெர சிற்றுண்டிச்சாலை மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து குத்தகைப் பணத்தை அறவிட்டுக் கொள்ளாத காரணத்தினால் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வந்துசெல்லும் சிற்றுண்டிச்சாலைக்கு 2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்குரியதாக அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய 6.6 மில்லியன் ரூபா குத்தகைப் பணம் கிடைக்காமல் போனமை.

10. முறையான வகையில் வாகனங்களை கறைநிரற் பட்டியற்படுத்துவதற்கும் பதிவை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.

11. மோட்டார் வாகனச் சட்டத்திற்கு (203 ஆம் அத்தியாயம்) ஏற்புடையதாகாத வகையில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல்.

12. சீ.எம்.ரீ. (CMT) அடிச்சட்டக இலக்கங்கள் முறையற்ற வகையில் வழங்கப்பட்டதன் காரணமாக 2025 பெப்புருவரி மாதமளவில் 1761 CMT அடிச்சட்டக இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தமை.

13. சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுவதில் இடம்பெற்றுள்ள மோசடிகள் மற்றும் ஊழல்கள் – சாரதி அனுமதிப்பத்திரத்திரமொன்றினை 2016 ஆம் ஆண்டு இணங்கிய தொகையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த விலைக்கு தற்போது வழங்க இணங்கியுள்ளதன் காரணமாக இதற்கு முன்னர் அதற்கென மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ஒரு பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்டதாக காணப்படுகின்றமை.

14. வாகன இலக்கத் தகடுகளில் மாகாண எழுத்துக்கள் அச்சிடப்படுவதன் காரணமாக வாகனத்தின் உரிமை மாகாணங்களுக்கு இடையே மாற்றம் செய்யப்படும் போது மீண்டும் மீண்டும் புதிய இலக்கத் தகடுகளையும், ஸ்ரிக்கர்களையும் அச்சிட வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டதனால் மேற்படி பயனற்ற விடயத்திற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 931 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தமை.

15. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாத்தறைக் கிளையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது, அதற்காக சித்தியடைய வேண்டிய எழுத்துமூலமான மற்றும் செயன்முறைப்

பரீட்சைகளுக்கு தகுதி பெறாத மற்றும் தோற்றாத விண்ணப்பதார்களுக்கு போலியான பெறுபேறுகளை உட்புகுத்தி செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

16. மோட்டார் வாகனச் சட்டத்திற்கமைய பொதுவான நடைமுறையின் போது, பயிற்சியில் ஈடுபடும்போது பயன்படுத்த வாய்ப்பில்லாத 1.8 மில்லியன் “எல்” (L) பலகைகளை கொள்வனவு செய்வதற்காக 162.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளமை.

17. வாகனப் புகைப் பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை முடிவுறுத்தி பொறுப்புக்களைத் தீர்த்துவைத்து நிதியத்தை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் நிதியத்தைத் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை நடவடிக்கை எடுத்திருந்தமை.

18. சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற (SRITIS) கணினி மென்பொருளுக்கான பராமரிப்பு மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே 154.1 மில்லியன் மற்றும் 181 மில்லியன் ரூபா என்றளவிலான அசாதாரணமான தொகைகள் செலவிடப்பட்டுள்ளமை.

19. சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அச்சு இயந்திரங்களின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது நிதிசார் பெறுமதி எண்ணக்கருவுக்குப் புறம்பாக, 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு அச்சு இயந்திரங்களின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 14.7 மில்லியன் என்ற பெறுமதி மதிப்பில்லாத தொகைக்கு தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டமை.

20. சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுவதை தனியார் கம்பனியொன்றிடம் ஒப்படைக்கும் போது பெறுகைச் செயன்முறையின்றி ஒரேயொரு தனியார் கம்பனியிடமிருந்து மாத்திரம் விலைமனுவைக் கோரி, 2023.09.15 ஆம் திகதி முதல் மேற்படி கம்பனியுடன் உடன்படிக்கையைச் செய்துகொண்டு சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிட்டதன் மூலம் 2023 முதல் 2024 யூலை மாதம் வரையான காலப்பகுதிக்குள் 134 மில்லியன் ரூபா மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளமை.

21. கடந்த ஒன்பது மாத காலப்பகுதிக்குள் ஒரு நாள் சேவையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதன் கீழ் சாதாரண முறையில் விண்ணப்பித்த விண்ணப்பங்களுக்குமாக சுமார் 300 இற்கும் 400 இற்கும் இடைப்பட்ட அளவிலான சாரதி அனுமதிப்பத்திரங்கள் ஒவ்வொரு

தினத்திலும் அச்சிடப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதுடன், அவ்வாறான ஒரு அனுமதிப்பத்திரத்திரம் ரூபா 5000/- எனும் சட்டத்துக்கு முரணான தொகைக்கு விற்பனை செய்யப்படுவதும் தெரியவந்துள்ளது.

22. சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளைக் கொள்வனவு செய்யும் போது முறைகேடுகளை மேற்கொண்டு, 4 இலட்சம் அட்டைகள் தேசிய பெறுகை வழிகாட்டல்களுக்கு புறம்பாக தேசிய போட்டித்தன்மைமிக்க விலைமனுக் கோரல் முறையியலின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டமை மற்றும் மேற்படி அட்டைகளில் காணப்பட வேண்டிய பிரதான பாதுகாப்பு முத்திரை மற்றும் விசேட அச்சிடல் அம்சங்கள் இன்றி உத்தேச அட்டைகளுக்கான பாதுகாப்பு அடையாளக் குறியீடுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளமை.

23. மோட்டார் வாகன வீதிச் சட்டங்கள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படாத தவறுகளுக்காக அறவிடப்படுகின்ற தண்டப் பணங்களை திரட்டும் முறைமை மற்றும் சாரதிகளுக்கு பாதகமான புள்ளி வழங்கும் செயற்பாட்டினை அமுல்படுத்தும் முறைமையினை முறையான கருத்திட்ட அடையாளம் காணலின்றி மற்றும் முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு கையளித்ததமையினூடாக ஒரு வருடத்திற்கு 1.5 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களுக்கான உறுதிப்படுத்தலை வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்ட ஐந்து வருட காலப்பகுதிக்கென 1905 மில்லியன் ரூபா என்ற பாரிய தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டமை.

24. சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குகையில் ஸ்ரீலங்கா ஓட்டோ மொபைல் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களுக்கு சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் அறவிடப்பட வேண்டிய கட்டணங்களுக்கு புறம்பாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 527.3 மில்லியன் ரூபா சட்டத்துக்கு புறம்பாக அறவிடப்பட்டுள்ளமை மற்றும் எந்தவொரு சட்டரீதியான அடிப்படையும் இன்றி இந்நாட்டுக்கு வருகை தருகின்ற சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து 8466/- ரூபா அறவிடப்பட்டு “ரெகக்னிசன் பர்மிட்” என்றழைக்கப்படுகின்ற சட்டத்திற்கு முரணான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை.

25. வாகனங்களை இனங்காண்பதற்கான இலக்கத்தைக் கொண்ட இலக்கத் தகடுகளை வெட்டும் ஒப்பந்த விலைகளைத் திருத்தம் செய்கின்ற போது பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணான வகையில் திருத்தங்களைச் செய்ததன் மூலம் இடம்பெற்றுள்ள முறைகேடுகள்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஏற்றுகொள்ளக்கூடிய பதில்களை வழங்குவதற்கு திணைக்கள அலுவலர்கள் தவறியுள்ள காரணத்தினால், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் செயற்பாடுகளையும் செயலாற்றுகையையும் கடுமையாக விமர்சித்த குழுவானது, சமர்ப்பிக்கப்பட்ட

சகல விடயங்களினதும் பாரதூரதன்மையை கருத்தில் கொண்டு மேற்படி முறைகேடுகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் தொடர்பாக திணைக்கள விசாரணைக் குழுக்கள் மூலம் கட்டாயமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் ஒரு மாதத்துக்குள் குழுவிற்கு அறிக்கையிடப்பட வேண்டுமெனவும், திணைக்களத்தின் செயலாற்றுகையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கு இத் திணைக்களம் மாதாந்தம் குழுவிற்கு அழைக்கப்பட வேண்டுமெனவும், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு இலங்கை ஒட்டோ மொபைல் சங்கத்திடமிருந்து விண்ணப்பம் ஏற்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டு அதன் முன்னேற்றம் ஒரு மாதத்துக்குள் குழுவிற்கு அறிக்கையிடப்பட வேண்டுமெனவும் குறித்த தரப்புகளுக்கு விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஊழல் மற்றும் மோசடிகள் சார்ந்த குற்றவியல் தவறுகள் தொடர்பாக நாட்டில் நிலவும் சட்டத்தின் பிரகாரம், நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் தண்டனை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், அதன் பொருட்டு மேற்படி அறிக்கையினை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து, பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் ஊடாக ஊழல் புரிந்த அலுவலர்களுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் மேலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் அவதானிக்கப்பட்டுள்ள பிரச்சனைகள்

மேற்படி விசாரணைகளில் ஒட்டுமொத்தமாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் நிலவும் கீழ் காணும் பிரச்சனைகள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளது.

1. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முந்தைய விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் குழுவின் விதப்புரைகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதியான பதில்கள் வழங்கப்படாமை.

2. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளை அடிப்படையாக கொண்ட கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகள் நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உறுதியான பதில்கள் வழங்கப்படாமை.

3. அமைச்சரவை தீர்மானங்கள்/அங்கீகாரங்களையும் விஞ்சும் வகையில் செயற்படுமளவுக்கு அலுவலர்கள் செயற்பட்டுள்ளமை.

4. திணைக்களத்தின் மந்தமான செயற்பாடுகள் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் நிலவுகின்றமை.

5. குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்களுக்கு தண்டனை அளிப்பதற்கு பதிலாக விபரங்களை திரட்ட முடியவில்லை என காரணம் தெரிவித்து அவர்களை குற்றமற்றவராக அறிவித்து விடுவிக்கும் போக்கு நிறுவனத்தில் காணப்படுகின்றமை

6. திணைக்கள ரீதியான விசாரணைக் குழுக்கள் முறை சார்ந்ததாக இல்லாமை மற்றும் அவற்றுக்கு நியமிக்கப்படும்/நியமிக்கப்பட்ட அலுவலர்கள் பொறுப்பின்றி செயற்படுகின்றமை.

7. விசாரணைக் குழுக்கள் மூலம் தெளிவாக அடையாளங் காணப்பட்ட ஒழுக்கத்துக்கு முரணான செயல்களுக்கு சந்தேக நபர்களான அலுவலர்களுக்கு எதிராகவேனும் உரிய செயன்முறையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.

8. தனித் தனியாக நடாத்தப்பட வேண்டிய விசாரணைகளை அவ்வாறு நடாத்தாமல் ஒன்றுக்கு மேற்பட்ட விசாரணைகளை ஒன்றில் இணைத்து விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டதால் சில விசாரணைகளின் முக்கிய விடயங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளமை மற்றும் அவை விசாரணைக்குட்படுத்தப்படாமை.

9. திணைக்களத்துக்குள் உள்ளக கணக்காய்வு முறையாக மேற்கொள்ளப்படாமை மற்றும் சீரான பின்னூட்டல் செயன்முறையொன்று காணப்படாமை.

10. திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்புகள் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படாமை, அதன் பொருட்டு உரிய பாதுகாப்புச் செயன்முறைகள் பயன்படுத்தப்படாமை, திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்களை இணைத்து இணையவழி கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படாமை மற்றும் கட்டமைப்பு முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடுகள்.

11. கோப்புகளை பராமரித்தல் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்வதில் காணப்படும் கடும் நெருக்கடியான பிரச்சனைகள்.

12. சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது மோட்டார் வாகனச் சட்டத்துக்கு இசைந்தொழுகாமல் செயற்பட்டுள்ளமை.

13. திணைக்களத்துக்குச் சொந்தமான பௌதீக வளங்களை சீராக முகாமைத்துவம் செய்யாமை.

14. திணைக்களத்துக்குச் சொந்தமான இயந்திரங்களை பழுது நீக்குவதற்கு யதார்த்தமற்ற சேவை உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்.

15. திணைக்களத்தின் பணிகளை தேவையற்ற வகையில் வெளி நிறுவனங்களுக்கு கொடுத்து **(outsource)** *பெருமளவு தொகையை வீண்விரயம் செய்தல்.*

16. பணியாட்டொகுதி வெற்றிடங்களை உரியவாறு நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை மற்றும் பணியாட்டொகுதியின் சேவை நிரந்தரமாக்கல் போன்ற திணைக்களம் சார்ந்த நிருவாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாமை.

17. சமகால அடிப்படையில் சட்டங்கள் திருத்தப்படாமை.

குழுவின் விதப்புரைகள்

1. மோட்டார் வாகன போக்குவத்துத் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு அரச நிறுவனங்களில் காணப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகள் மற்றும் தாபனக் கோவையின் பிரகாரம் கட்டாயம் தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்பதோடு அதன் பொருட்டு ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியது கட்டாயமென்பது;

2. சகல திணைக்கள விசாரணைகளுக்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் உறுதியான தலையீடும் மேற்பார்வையும் இருத்தல் வேண்டுமென்பது;

3. அரசாங்கத்துக்கு உரித்தாக வேண்டிய வருமானத்தை இழக்கச் செய்யும் வகையிலான பெரும் நிதி மோசடிகளுக்கு ஏதுவாகவுள்ள திணைக்களத்தின் பல முறைகேடுகள் தொடர்பாக 2020,2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள் மற்றும் 2023.09.12 ஆம் திகதியிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விஷேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் விடயங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளதால் மேற்படி அறிக்கைகளின் அடிப்படையில் தொடர் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது;

4. மேற் குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கைகள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ள ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களுக்கு எதிராக ஏற்புடைய ஒழுக்காற்று அதிகாரிகளினால் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும் மேற்படி ஒழுக்காற்று விசாரணைகளின் முன்னேற்றம் மாதாந்தம் குழுவிற்கு அறிவிக்கப்பட வேண்டுமென்பதும்;

5. ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் வெளிக்கொணரப்படும் குற்றவியல் தவறுகள் தொடர்பாக நாட்டில் நிலவும் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றச் செயற்பாடுகள் மூலம் குற்றவாளிகளுக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டுமென்பது;

6. கணக்காய்வு அறிக்கைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள மற்றும் குழுவுக்கு முன்னால் வெளிக்கொணரப்பட்டுள்ள குற்றவியல் தவறுகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதன் மூலம் ஏற்புடைய அறிக்கைகளை சட்ட மா அதிபருக்கு ஆற்றுப்படுத்தி சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் ஊடாக குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமென்பது;

7. திணைக்களத்தில் வலுவான உள்ளகக் கணக்காய்வு மற்றும் சீரான தொடராய்வு செயன்முறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்பது

8. திணைக்களத்தின் சமகாலத் தேவைகளுக்கேற்ற மிகப் பாதுகாப்பான கணினி கட்டமைப்பொன்றை துரிதமாக உருவாக்குதல், திணைக்களத்தின் அனைத்து பிராந்திய அலுவலக நடவடிக்கைகளையும் அக்கட்டமைப்புடன் இணைத்தல், சீரான கட்டமைப்பு முகாமைத்துவத்தின் மூலமாக பயன்படுத்துனர்களுக்கு வழங்கியுள்ள கடவுச் சொற்களை முறைகேடாகப் பயன்படுத்துதல், கட்டமைப்பிலுள்ள தரவுகளை அழித்துவிட்டு புதிய தரவுகளைச் சேர்த்தல், பழைய தரவுகளை மீளவும் பெற்றுக்காள்ள முடியாதவாறு அழித்தல், வாகனப் பதிவு இலக்கங்களை ஒழுங்குமுறையாக வழங்குவததற்கு பதிலாக குறிப்பிட்ட சில இலக்கங்களை வெற்றிடமாக வைத்து வாகனங்களின் பதிவுகளை மேற்கொள்ளுதல் போன்ற தவறுகள், ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டுமென்பது;

9. மேற்குறிப்பிட்ட கணனிக் கட்டமைப்பை இலங்கைச் சுங்கம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் இணைப்பதன் மூலமாக முறைகேடுகள் இடம்பெறும் சந்தர்ப்பங்களைத் தடுப்பதுடன் வினைத்திறனான சேவைளை வழங்குவதற்கான நடவடிக்கைளையும் மேற்கொள்ளுதல் வேண்டுமென்பது;

10 கோப்புகளை பராமரிக்கவும் அவற்றை முகாமைத்துவம் செய்யவும் மேலான பொறுப்புடன் கூடிய செயன்முறையொன்றை ஏற்படுத்துதல், எதிர்காலத்தில் சகல ஆவணங்களையும் டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் மிகப் பாதுகாப்பான செயன்முறையொன்றை உருவாக்குதல் வேண்டுமென்பதும்;

11 சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்ளை வழங்கும்போது மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்திற்கு இணக்கமில்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதால், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொண்டு குழுவிற்கு அறிக்கையிடுமாறு திணைக்களத்தின் பொறுப்புக்கூறும் அலுவலருக்கு விதப்புரை வழங்குதல்;

12 கணக்காய்வு அவதானிப்புகளாக அடையாளங் காணப்பட்டுள்ள, இருப்பினும் பல்வேறு தொடராய்வு நடவடிக்கைகளின் பின்னரும் செயற்படுத்தப்படாத காரணத்தினால் 2019.10.23 ஆம் திகதி இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளுக்கு ஏற்புடையதான 25 விடயங்கள் தொடர்பாக (12ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள) ஓய்வுபெற்ற நீதிபதிகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிலையிலான ஓய்வுபெற்ற அலுவலர்கள் மற்றும்/ அல்லது ஓய்வுபெற்ற அரச அலுவலர்கள் உள்ளடங்கிய, இரண்டு அல்லது ஐந்து பேரை கொண்ட விசேட சுயாதீன விசாரணைக் குழுவொன்றை நியமித்து இது தொடர்பான முழுமையான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறும், குறித்த விசாரணைக் குழுவின் விதப்புரைகளுக்கு அமைவாக குற்றஞ்சாட்டப்பட்ட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு எதிராக தேவையான முக்கிய விதப்புரைகள் மற்றும் குற்றப்பத்திரிகையுடன் சமர்ப்பித்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும்

சிவில் விமான சேவைகள் அமைச்சின் பிரதான பொறுப்புக்கூறும் அலுவலர் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களப் பொறுப்புக்கூறும் அலுவலருக்கும் விதப்புரைகளை வழங்குதல்;

13 மேற்குறிப்பிட்ட இல 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள 25 விடயங்கள் தொடர்பாகவும் 2020ஆம் ஆண்டில் மேற்கொண்ட திணைக்கள மட்ட விசாரணையில் அப்போது கடமையாற்றிய பொறுப்புக்கூறும் அலுவலர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்த 118 கோப்புகள் தொடர்பான விசாரணை அறிக்கையை அத்திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்டு அந்த விசாரணையின் முன்னேற்றம் தொடர்பாக குழுவிற்கு அறிக்கையிடுமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் பொறுப்புக்கூறும் அலுவலருக்கு விதப்புரை வழங்குதல்;

14 கணக்காய்வாளர் தலைமையதிபதி 2023.09.12 ஆம் திகதியிட்டு சமர்ப்பித்த 2022 விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைளும் மேலே 12 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் ஓய்வுபெற்ற அரசாங்க அலுவலர்களை கொண்ட விசேட விசாரணைக் குழுவுக்கே ஒப்படைக்குமாறு பிரதான பொறுப்புக்கூறும் அலுவலருக்கு விதப்புரை வழங்குதல்;

15 மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தை தொடர்ச்சியாக குழுவின் முன்பாக அழைத்து அதன் செயலாற்றுகை தொடர்பில் ஆராய்தல்; மற்றும்

16 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளரின் இல. MT/ 04/ 14/ 02/ 02-2025 ஆம் இலக்க மற்றும் 2025.04.23ஆம் திகதிய அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்ட குழு மேற்படி விடயங்கள் நீதியானதும் நியாயமானதுமான விடயங்களாக ஏற்றுக்கொள்வதை நிராகரித்துள்ளதால், விசாரணைக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் உரிய காலப்பகுதியில் விசாரணை நடவடிக்கைகளை நிறைவு செய்து அறிக்கையை சமர்ப்பிக்காது கவனயீனமாகவும் பொறுப்பற்ற முறையிலும் செயற்பட்டமை தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு குறிப்பிட்ட அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகைகள் மேற்கொள்ளல்.

இணைப்புக்கள்

இணைப்பு - I

2019.10.23ஆம் திகதி இடம்பெற்ற குழுக் கூட்டத்தின் பணிப்புரை இல. 05 இற்கமைவாக 25 கணக்காய்வு அவாதானிப்புக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை.

கீழ் காணும் விடயங்கள் தொடர்பாக திணைக்களத்திலுள்ள தகவல்களின் பிரகாரம் இது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக திருப்தியடைய முடியாதென்பதால் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்படும் விதப்புரைகளுக்குட்பட்டு திணைக்களத்திற்கு புறம்பாக சுயாதீனக் குழுவை நியமித்து இங்குள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் முறையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு இணங்குவதுடன், அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் தேவையான வசதிகளை திணைக்களம் வழங்குமென மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்தார்.

தொடர் இல.	கணக்காய்வு அவதானிப்புக்கள்	மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்
1.1	மத வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கிய அனுமதிப்பத்திரங்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட 158 வாகனங்களின் அனுமதிப்பத்திரதாரர்களின் பெயர் அல்லது அனுமதிப்பத்திரத்துக்குரிய ஒப்படைப்புக்கள் தொடர்பான நிபந்தனைகளை மாற்றி பதிவு செய்துள்ளமை மற்றும் 120 வாகனங்களின் உற்பத்தி ஆண்டு மாற்றப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.	விகாரைகளின் செயலாற்றுகைச் சங்கத்திற்கு பதிலாக வேறு நபரொருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் நிபந்தனைகளை அகற்றி வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தொடர்பான அடிப்படை விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. • அடிப்படை விசாரணைக்கு பதிவுசெய்யப்பட்ட ஆரம்ப கோப்புகளை கண்டுபிடிக்கமுடியவில்லை. • 27 அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட ஆரம்ப வாக்குமூலங்களை அடிப்படையாக கொண்டு அடிப்படை விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. • கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள 73 வாகன இலக்கங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை விசாரணையின் பிரகாரம் திணைக்கள அலுவலர்கள் தொடர்பில் கீழ்கண்டவாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1. குற்றஞ்சாட்டப்பட்டவர் திரு. என்.பி கெகுலந்தல (இலங்கை நிருவாகச் சேவை) இவருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட அலுவலரின் ஒழுக்காற்றுப் பொறுப்பு அலுவலராகிய செயலாளர், பகிரங்க சேவைகள்

		ஆணைக்குழுவிற்கு 2014.09.03ஆம் திகதிய DMT/H/E/01/D/KEKU ஆம் இலக்க கடிதம் மூலமாக சமர்ப்பித்துள்ளார். பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் 2015/10/12ஆம் திகதிய PSC/DIS/096/2024 ஆம் இலக்க கடிதம் மூலம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. i. **குற்றஞ்சாட்டப்பட்டவர் 2**. திரு. R. ஈஷ்வரலிங்கம் (திணைக்கள எழுதுவினைஞர்) முறையான ஒழுக்காற்று விசாரணையை தொடர்ந்து மீளச் சேவையில் அமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. • கணக்காய்வின் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள தகவல்கள், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் சுங்கத் திணைக்களம் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை கவனத்திற் கொண்டு அதில் காணப்படுகின்ற மாற்றங்கள் காரணமாக 85 வாகனங்கள் பூர்வாங்க விசாரணையில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.
1.2	பாவிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான இறக்குமதிக் குறிப்புகளுக்கு அமைவாக பொதியிடல் ஆவணங்களை (Packing List) போலியாக மாற்றி சுங்கத் தீர்வை வரி செலுத்தப்படாது நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 302 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.	இது தொடர்பான பூர்வாங்க விசாரணை அல்லது முறையான ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொண்டதற்கான தகவல்களை கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது.
1.3	மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்ட 05 குறிப்புக்களைப் பயன்படுத்தி சுங்கத் தீர்வை வரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட டோயோட்டா எலியன், பிரீமியோ, டோயோட்டா கொரல்லா மற்றும் எக்சியோ வகை 05	இக்கோப்புகளை தேடிப்பார்த்த போதிலும் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதுடன், குறித்த காலப்பகுதியில் கடமையாற்றிய அலுவலர்கள் தற்போது திணைக்களத்தில் சேவையில் இல்லை. எவ்வாறாயினும் தற்போது குறைபாடுகள் ஏற்படுவதை தடுப்பதற்காக உள்ளக நிருவாக ரீதியான நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

	வாகனங்கள் போலியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.	
1.4	ஏனைய மோட்டார் வாகனங்களினதும் குறித்த சுங்கக் குறிப்பு இலக்கங்களை போலியாக பயன்படுத்தி டொயோட்டா லேன்ட் குரூசர் பிராடோ ரக இரண்டு ஜீப் வண்டிகள், மிட்சுபிசி மொன்டேரோ ரக இரண்டு ஜீப் வண்டிகள் மற்றும் நான்கு மர்மிட்ஸ் பென்ஸ் வாகனங்கள் உட்பட 18 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.	குறித்த ஒரு வாகனம் தொடர்பான கணக்காய்வு பந்தியுடன் இணங்கவில்லை என்பதுடன் மிகுதி 17 கோப்புகள் தொடர்பாக அப்போது சேவையாற்றிய அலுவலர்களிடம் வினவி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென 2019.11.07ஆம் திகதியன்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
1.5	வாகனப் பதிவுகளுக்காக சுங்கத் திணைக்களம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு வழங்கியுள்ள அனைத்து தகவல்களையும் மாற்ற முடியாதவாறு தயாரிக்கப்பட்ட கணனி வலையமைப்புக் கட்டமைப்பொன்று நிறுவப்படவில்லை.	சுங்கத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு வாகனங்களின் பதிவுகளுக்காக வழங்கும் தகவல்களை மாற்ற முடியாதவாறு திணைக்களத் தரவுக் கட்டமைப்புடன் தொடர்புறும் வகையில் தயாரிக்கப்பட்ட கணனி வலையமைப்புக் கட்டமைப்பொன்று 2020.07.07ஆம் திகதி முதல் நிறுவப்பட்டுள்ளது.
1.6	இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களின் உற்பத்தி ஆண்டு, உற்பத்தி செய்யப்பட்ட நாடு மற்றும் சிலின்டர் கொள்ளளவு உள்ளிட்ட முக்கியமான விபரங்கள் சுங்கத்தின் கணனி வலையமைப்புடன் தொடர்புபடுத்தப்படாமையினால் மேற்படி விடயங்களை மாற்றி மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.	2020.07.07 ஆம் திகதியின் பின்னர் இந்நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளது.
1.7	போக்குவரத்துச் செயற்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட வாகனமொன்றின் இலக்கத்தை பயன்படுத்தி	KU-7179 எனும் இலக்கத்தை கொண்ட Hummer மோட்டார் வாகனம் தொடர்பாக 2012.10.31. ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கோப்பு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

	சுங்கத் தீர்வை வரியை செலுத்தாது சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட மிட்சுபிசி மொன்டரோ ரக சேர்ந்த ஜீப் வண்டியொன்றும் சுங்கத் தீர்வை வரி செலுத்தப்படாது இறக்குமதி செய்யப்பட்டுள்ள Hummer ரக மோட்டார் வாகனமொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இந்த மோட்டார் வாகனம் சுங்கத்தினால் ஏலத்தில் விற்கப்பட்ட வாகனமெனில், பதிவு நிலைமை (Registration status) Brought from Auction ஆக இருக்க வேண்டும். இருப்பினும், தற்போது இம்மோட்டார் வாகனம் Recondition நிலைமையில் காணப்படுகின்றது.
1.8	மில்லட் மாதிரி வகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 164 டிராக்டர்கள் மெசீ பர்கிஷன் வகையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.	பாகிஸ்தான் நாட்டின் Milart tractors எனும் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு இந்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள டிராக்டர்கள் Massey Ferguson எனும் வர்த்தக நாமத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. குறித்த இறக்குமதி தகவலுக்கு அமைவாக இத்திணைக்களத்தில் டிராக்டர் வண்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. Millat Tractors Massey Ferguson Ltd மூலமாக Massey Ferguson டிராக்டர்கள் உற்பத்தி செய்யப்படுவதாக www.milallat.com.pk இணையத்தளத்தின் மூலமாக உறுதியாகின்றது. இந்த வர்த்தக நாமத்தின் கீழ் டிராக்டர்கள் இறக்குமதி செய்துள்ளமை தொடர்பாக பிரவுன்ஸ் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு காரணமாக இந்நிறுவனம் குறித்த வர்த்தக நாமத்தின் கீழ் டிராக்டர் இறக்குமதியை நிறுத்தியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளன.
1.9	மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய பண்டங்களை இறக்குமதி செய்ததற்கான சுங்கக் குறிப்புகளைப் பயன்படுத்தி பீ.எம்.டபிள்யூ. டொயோட்டா பிராடோ மற்றும் மர்ஸிடிஸ் பென்ஸ் உள்ளிட்ட 08 அதி சொகுசு மோட்டார் கார்கள் உட்பட மொத்தமாக 26 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.	இக்கணக்காய்வுப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 26 வாகனங்கள் தொடர்பான கோப்புகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் 03 வாகனங்களின் பதிவுகள் தொடர்பான தகவல்கள் கீழ்வருமாறு. LK – 1301 எனும் இலக்கத்தையுடைய வாகனம் இலங்கை தரைப்படையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு குறித்த வாகனம் பௌதீக ரீதியான சோதனைக்குட்படுத்தப்பட்டதோடு, பெறப்பட்ட கனரக சான்றிதழுக்கு அமைவாக மோட்டார் லொறியொன்றாகப் பதிவு

		செய்யப்பட்டுள்ளது. KU - 7616 எனும் இலக்கத்தைக் கொண்ட வாகனம் மைக்ரோ ரக மோட்டார் கார் ஆகும். இவ்வாகனத்துக்கு மூல முன்மாதிரி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைவாக மோட்டார் கார் என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. KL – 4219 எனும் இலக்கத்தைக் கொண்ட வாகனம் HS இலக்கம் 8703 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதோடு, மோட்டார் கார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய வாகனங்கள் தொடர்பாக கட்டமைப்புக்கு அமைவாக சுங்கத் தொடர்புகளின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இவ்வாகனப் பதிவுகள் சரியானது என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் சுங்கத்தினால் விடுவிக்கப்பட்ட வாகனங்களின் செஸி இலக்கங்கள் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள செஸி இலக்கங்கள் தொடர்பில் பரிசோதித்து முறையான விசாரணையொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்படாது பதில் வழங்கப்பட்டுள்ளது.
1.10	குறித்ததொரு வாகனம் தொடர்பாக 2013 ஏப்பிறல் மாதம் 04ஆம் திகதி கணனிக் முறைமையில் காண்பிக்கும் தகவலுக்கமைவாக அந்த வாகனம் 2004ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2013 ஏப்பிறல் மாதம் 18ஆம் திகதி மேற்கொண்ட ஆய்வின் போது அது 2007 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டதாக போலியாக தரவுகள் மாற்றப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.	PE - 6802 பதிவிலக்கத்திற்கான சுங்கத் தொடர்புகள் மற்றும் இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய ஆவணமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஆவணத்தின் 10ஆம் நிரலில் உற்பத்தி ஆண்டு 2007 என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் www.ipcenter.ru இணையப் பக்கத்தினூடாக இதன் உற்பத்தி ஆண்டை ஆய்வு செய்த போது 2004 ஆம் ஆண்டு என்பது உறுதியாகின்றது. அதற்கமைவாக இவ்வாகனத்தின் உற்பத்தி ஆண்டு மாற்றமடைந்துள்ளமை தொடர்பாக ஆராயப்பட வேண்டியுள்ளது.
1.11	“P” மற்றும் “L” எழுத்து வகுதியின் கீழ் முறையே	ஏற்புடைய கணக்காய்வு விசாரணையில் LG - 8080, PF - 3552, PF -1643, PF - 5126, PE -

	இரட்டைச் செயற்பாட்டு வாகனங்கள் மற்றும் லொறிகள் மாத்திரம் பதிவு செய்யப்படுகின்ற போதிலும், இந்த எழுத்து வகுதியின் கீழ் 05 கதவுகளைக் கொண்ட 24 சொகுசு ஸ்டேசன் வெகன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 24 கேப் வாகனங்கள் மற்றும் டிபன்டர் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் 05 கதவுகளைக் கொண்ட ஸ்டேசன் வெகன் வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.	8985, மற்றும் PE – 5803 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் தொடர்பாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறித்த வாகனங்கள் சுங்க விடுவிப்புடன் பொருந்தும் வகையில் முறையாக இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அப்போதைய அதன் கோப்புகளை ஆய்வு செய்து அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த பதிவை தொடர்ந்து மோ. போ. ஆ. நா. முன் அனுமதியின்றி குறித்த வாகனங்கள் பௌதீக ரீதியாக அதனை மாற்றிப் பயன்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டு குறித்த வாகனங்ள் இத்திணைக்களத்தின் மூலம் மீள ஆய்வு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டுள்ள போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.
1.12	கானட் அனுமதிப்பத்திரங்களின் (Carnet) அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை மீள ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற போதிலும், அவ்வாறான 08 வாகனங்கள் முறையற்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.	இந்த 08 மோட்டார் வாகனங்களும் சுங்கத் தொடர்பின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளமை கட்டமைப்புக்கமைவாக உறுதியாகின்றது. இருப்பினும் இக்கணக்காய்வு விசாரணைக்கு அமைவாக இத்தகவல்களை சுங்கத் திணைக்களத்துடன் ஆய்வு செய்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் எதுவும் காணப்படவில்லை.
1.13	CMBVI - 570 மற்றும் CMBVI -207ஆம் இலக்கச் இறக்குமதி சுங்கக் குறிப்புகளின் மூலம் 08 லேன்ட் ரோவர் ரக கேப் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 02 வாகனங்கள் மோட்டார் கார் வகுதியின் கீழ் 02 சொகுசு ஜீப் வண்டிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைவாக குறைந்த சுங்கத் தீர்வை இணைந்த இலக்கத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் மோட்டார் கார், ஜீப், வேன் மற்றும் டபிள் கேப் வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.	இம்மோட்டார் வாகனங்கள் சுங்கத் தொடர்பின் அடிப்படையில் கட்டமைப்புத் தகவலுக்கு அமைவாக பதிவு செய்துள்ளமை உறுதியாகின்றது. இருப்பினும் கணக்காய்வு விசாரணைக்கு அமைவாக இத்தகவல்களை சுங்கத் திணைக்களத்துடன் ஆராய்ந்து உறுதிப்படுத்தியமை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.

1.14	CMBVI – 5636 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29ஆம் திகதிய சுங்கக் குறிப்பு மற்றும் சுங்க இணைந்த இலக்கம் 8706 இன் மூலமாக வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து அவற்றை பயன்படுத்தி 23 வாகனங்கள் வடிவமைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட சுங்கக் குறிப்பை மாற்றி இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாக திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.	இந்த 23 வாகனங்களின் மேற்பகுதி (BODY) பூரணப்படுத்தியதன் பின்னர் பதிவு செய்வதற்கு முற்படுத்துகையில் மேற்படி 23 வாகனங்களின் உட்கட்டமைப்பை பூர்த்தி செய்த பின்னர் பதிவுக்கு சமர்ப்பிக்கும் போது அதன் மொத்த நிறையானது 3500 kg இற்கு குறைவென்பதால் குறித்த வாகனங்கள் மோட்டார் வாகனச் சட்டத்தின் வகுப்பு வகைப்படுத்தலுக்கு அமைவாக இரட்டைச் செயற்பாட்டு வாகன வகுப்பிற்கு உரியதாகும். அதற்கமைவாக குறிப்பிட்ட வாகனங்கள் மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அமைவாக இரட்டைச் செயற்பாடு கொண்டதாக சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
1.15	சுங்கத் திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம் கேப் ரக வானங்களாக சுங்கத் தீர்வை வரி செலுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 03 வாகனங்கள் மோட்டார் கார்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.	இந்த 03 வாகனக் கோப்புகளில் KX – 8089 ஆம் இலக்க கோப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு மேற்படி வாகனங்களுக்குரிய சுங்கக் குறிப்புகளின் பிரகாரம் HS 8704 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனம் பௌதீக சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதோடு, அதற்கமைவாக இவ்வாகனம் மோட்டார் காரொன்றாகப் பதிவு செய்வதற்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு விசாரணைகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள பதில்களின் படி குறிப்பிட்டதொரு முரண்பாடு காணப்படுவதாக தெரிகிறது.
1.16	சுங்க இணைந்த இலக்கம் 8403 இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட நோயாளர் காவு வண்டியாக பதிவு செய்யப்பட்டுள்ள வாகனத்தின் பௌதீக ஆய்வில் அது சொகுசு ஜீப் வண்டி என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், நோயாளர் காவு வண்டிகளாக இறக்குமதி செய்யப்பட்ட 02 வாகனங்கள் இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.	இத்திணைக்களத்தில் குறித்த வாகனங்கள் LW – 0115, LW -0086 மற்றும் LW – 0197 இன் கீழ் நோயாளர் காவு வண்டிகளாகப் (Ambulance) பதிவு செய்யப்பட்டு, முறையே 2012.07.04, 2012.07.04 மற்றும் 2014.10.28ஆம் திகதிகளில் இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாக மாற்றப்பட்டுள்ளன.

1.17	120 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்ட 72 சுங்கக் குறிப்புகள் மூலம் 1977 மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் எந்தவிதமான மோட்டார் சைக்கிள்களும் இறக்குமதி செய்யப்படாது, 07 சுங்கக் குறிப்புகளின் மூலம் 2098 மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ததாகவும் போலியாக/மோசடியான முறையில் குறிப்பிட்டு 3955 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.	இது தொடர்பாக யாதேனும் மோசடி இடம்பெற்றுள்ளதா என்பது பற்றி விசாரணை மேற்கொள்வதற்காக திணைக்களத்திற்குப் புறம்பான சுயாதீன நிறுவனமொன்றுக்கு ஒப்படைப்பதற்கு குறித்த வாகனங்களின் தகவல்கள், பதிவு மற்றும் உரித்து ஒப்படைத்தலுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களின் தகவல்களும் முறைமை உள்நுழைவு (User Loging) மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
1.18	2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதி தொடக்கம் 2014 யூன் மாதம் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட, பாவிக்கப்பட்ட 108 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான தகவல்கள் சுங்கத் திணைக்களத்தின் கணனிக் கட்டமைப்பின் தகவல்களுடன் பொருந்தவில்லை.	இது தொடர்பில் யாதேனும் மோசடி இடம்பெற்றுள்ளதா என்பதை கண்டறிவதற்கு சுயாதீன விசாரணையொன்றை மேற்கொள்ளும் பொருட்டு திணைக்களத்திற்குப் புறம்பான நிறுவனமொன்றுக்கு ஒப்படைப்பதற்கு குறித்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள், மேற்படி வாகனங்களின் பதிவு மற்றும் உரித்து ஒப்படைத்தலுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களின் தகவல்களும் முறைமை உள்நுழைவு (User Loging) மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
1.19	ஒரே மாதிரியான இரண்டு மிட்சுபிசி வெகன் வாகனங்கள், இரு வகுப்புகளின் கீழ் அதாவது KN - 4062 மற்றும் PG – 7755 ஆக முறையே மோட்டார் கார் மற்றும் இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று பண்டங்களின் போக்குவரத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட வேனொன்றை மோட்டார் காராக KN – 3916 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.	HS CODE இலக்கத்திற்கு அமைவாக இவ்வாகனங்கள் மோட்டார் கார் வகுதியின் கீழ் பதிவு செய்ய வேண்டுமென்ற போதிலும், இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

1.20	K எழுத்து வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய 13 மோட்டார் கார்களும் "PP" தொடக்கம் "PY" எழுத்து வகையின் கீழ் இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மோட்டார் கார்களாக பதிவு செய்ய வேண்டியுள்ள 04 வாகனங்களும் "PA" தொடக்கம் "PM'' வாகனங்களை அடையாளம் காணும் எழுத்து வகையின் கீழ் இரட்டை கேப் வாகனங்களாகவும் வேன்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு மோட்டார் கார்களாகப் பதிவு செய்ய வேண்டியுள்ள 04 வாகனங்களும் மோட்டார் லொறிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன.	இலங்கைச் சுங்கத்தினூடாக வழங்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டதற்கான தகவல்கள் காணப்படவில்லை.
1.21	PV – 9789 மற்றும் PR – 1900 ஆம் இலக்கத்தின் கீழ் முறையே ட்ரக் வாகனமாகவும், ஒற்றை கேப் வாகனமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டு வாகனங்களும் பௌதீக சோதனையின் போது லேன்ட் றோவர் டிபன்டர் ரக டபிள் கேப் வாகனங்கள் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் சுங்கத்தின் குறைந்த இணைந்த இலக்கத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு பின்னர் சொகுசு கேப் வாகனங்களாக மாற்றப்பட்டுள்ளன.	PV – 9789 எனும் பதிவு இலக்கத்தின் கீழ் அசோக் லேலன்ட் வாகனமொன்றும், PR – 1900 எனும் பதிவு இலக்கத்தின் கீழ் லேன்ட் றோவர் வாகனமொன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பௌதீக சோதனையின் போது லேன்ட் றோவர் டிபன்டர் ரக டபிள் கேப் வாகனமெனத் தீர்மானிக்கப்பட்ட போதிலும், இத்திணைக்களத்தில் காணப்படுகின்ற தகவலுக்கமைவாக Single Cab வாகனமாக காணப்படுகிறது.
1.22	(i) சுங்கத்தின் இணைந்த இலக்கம் 8705 இன் கீழ் 7% குறைந்தபட்ச சுங்க வரியைச் செலுத்தி 07	விசேட பணிக்கான வாகனங்களை பதிவு செய்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் ZA ஆம் இலக்க வகுதி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கையில், மோட்டார்

	வருடங்கள் பழமையான விசேட பணிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 78 வாகனங்கள், சுங்க இணைந்த இலக்கம் 8704 இன் கீழ் 85% - 115% சுங்க வரி செலுத்த வேண்டியுள்ள கலப்பின கார்கள், 22 வேன்கள் மற்றும் 56 லொறிகள் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக பாரியளவு சுங்கத் தீர்வை வரி மற்றும் பதிவுக்கட்டண வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது.	வாகனப் போக்குவரத்து ஆணையாளர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இரட்டைச் செயற்பாட்டு வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களின் வகுதிகளின் கீழ் பதிவு செய்துள்ளமையால் இச்சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாகனங்ளை ZA வகுதியின் கீழ் பதிவு செய்து பயணிகள் போக்குவரத்து மற்றும் பண்டங்கள் போக்குவரத்துக்கு குறித்த வாகனங்ளை நவீனமயப்படுத்த முடியாதென பதிவுச் சான்றிதழில் நிபந்தனையொன்றை சேர்ப்பதன் மூலம் முரண்பாடு ஏற்படாதவாறு மேற்படி வாகனங்களை பதியக்கூடிய நிலைமை இருந்தும் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது வரையில் இவ்வாறாக 507 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், வாகனமொன்றுக்கு அண்ணளவாக 3 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான சுங்கத் தீர்வை வரி வருமானம் இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
	(II) 5.22 (I) ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 2010 சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2013 ஒற்றோபர் மாதம் 31ஆம் திகதி வரையில் சுங்க இணைந்த இலக்கம் 8705 இன் கீழ் விசேட பணிக்காக இறக்குமதி செய்யப்பட்ட 540 வாகனங்களில் 93 வாகனங்கள் இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாகவும், மேலும் 358 வாகனங்கள் மோட்டார் கார்களாகவும், பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக சுமார் ஆறு மில்லியன் ரூபாய் பதிவுக் கட்டண வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது.	அதே
	(iii) மோட்டார் வாகனப் போக்குவரத்து மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்கள அலுவலர்களின் பங்கேற்புடன் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 23ஆம் திகதியன்று	2014 யூலை மாதம் 23ஆம் திகதி மேற்கொண்ட கலந்துரையாடலின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த தேவையான தகவல்களை கண்டெடுக்க முடியாதுள்ளதுடன், மீண்டும் 2019ஆம் ஆண்டில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு நிதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கிய விதப்புரைகளுக்கு அமைவாக

	கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டு அதன்போது எட்டப்பட்ட/தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகம் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ள போதிலும் அதற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ➢ விசேட பணிகளுக்கான வாகன இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரமொன்றைப் பெறுவதை கட்டாயமாக்குதல். ➢ இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாகப் பதிவு செய்வதற்கு முன்னராக குறித்த வாகனங்களுக்கான தீர்வை வரி உரியவாறு விதிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி சுங்கத்தின் உற்பத்தி தொடர்பான சுங்கப் பணிப்பாளரிடம் உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டதன் பின்னரே பதிவுகளை மேற்கொள்ளுதல். ➢ மோசடியாக/போலியாக இரட்டைச் செயற்பாட்டு வாகனங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வாகனங்களின் மூலம் இழந்துள்ள தீர்வை வரித் தொகையை அறவிடுவதற்கு குறித்த வாகனங்களின் தகவல்ளை சுங்கத்தின் உற்பத்தி தொடர்பான	நியமிக்கப்பட்டுள்ள குழுவின் உத்தேச விதப்புரைகளுக்கு அமைவாக சுங்கத் தீர்வை அறவீட்டில் காணப்பட்ட மாற்றங்கள் சீர்செய்யப்பட்டு உள்ளதுடன், இவ்வாகனங்களின் பதிவு தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் PZA எனும் வகுதி அறிமுகப்படுத்தி உள்ளதுடன் அதற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

	தீர்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல்.	
1.23	திணைக்களத்தில் சிங்கிள் கேப் வாகனங்களாக பதிவுசெய்து, பின்னர் ஜீப் வண்டிகளாக மாற்றப்பட்டுள்ள 18 வாகனங்களிலிருந்து கிடைக்க வேண்டியுள்ள சொகுசு தீர்வை வரியாகிய ரூ. 4,320,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை.	குறித்த சிங்கிள் கேப் வாகனங்களை பதிவு செய்த பின்னர், இத்திணைக்களத்தின் கணனித் தகவல்கள் உள்ளடங்கிய அச்சுப் பிரதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. குறித்த பிரதிகளுக்கு அமைவாக இந்த சிங்கிள் கேப் வாகனங்களின் உள்ளமைப்பை மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் 19ஆம் பிரிவுக்கமைவாக உரிய அனுமதியின்றி சட்டரீதியற்ற முறையில் மாற்றியுள்ளமை அவதானிக்க முடிவதோடு, இச் சகல வாகனங்களையும் மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பரிசோதகரொருவருக்கு முற்படுத்துமாறு தற்போதைய உரிமையாளர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதற்கமைவாக எதிர்காலத்தில் அவ்வாகனங்களில் அனுமதியின்றிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் 18(2) இற்கமைவாக நடவடிக்கை மேற்கொண்டு பதிவை இரத்துச் செய்தல் மற்றும் வெளிக்கொணரப்படும் விடயங்களின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
1.24	மோட்டார் வாகனமொன்று விபத்துக்குள்ளாகி அல்லது இயற்கைக் காரணங்கள் அல்லது வேறு காரணங்களினால் முழுமையாக அழிவடையும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கான முறையொன்று காணப்படாமையால் அவ்வாறான வாகனங்களை கறை நிரற் பட்டியலுக்கு (BLACK LIST) சேர்க்கப்படாத நிலைமை அவதானிக்கப்பட்டது. இவ்வாகன இலக்கங்களை பயன்படுத்தி மோசடியாக கட்டமைக்கப்பட்ட அல்லது வேறு வகையில்	கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டுள்ள HB - 8907 ஆம் இலக்க வாகனத்தை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு முற்படுத்தி பௌதீக சோதனைக்குட்படுத்தப்பட்டமை அவதானிக்க முடியாமல் இருப்பதால், குறித்த மோட்டார் வாகனத்தை பௌதீக சோதனைக்கு முற்படுத்துமாறும், அதன்போது வெளிப்படுத்தப்படும் விடயங்களுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குழுவிற்கு பணிவுடன் அறியத் தருகின்றேன்.

	வடிவமைக்கப்பட்ட வாகனங்களின் தரவுகளை உள்ளடக்கிதாக பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.	
1.25	2004 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 2001ஆம் ஆண்டில் கொரியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஹய்யுன்டாய் (HYUNDAI) ரக வாகனங்களை 2011ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் உற்பத்தி செய்யப்பட்ட லேன்ட் ரோவர் (Land Rover Defender) ரக சேர்ந்த வாகனங்களாக சுமார் 11 வருடங்களின் பின்னராக அதாவது 2015ஆம் ஆண்டு யூலை மாதம 22ஆம் திகதியில் CAI – 0469 ஆம் இலக்கத்தின் கீழ் மோசடியான /போலியான முறையில் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, வர்த்தக வாகனங்களாக பதிவுப் பிரிவின் உதவி ஆணையாளர் விடுமுறை பெற்றிருந்த தினமான அன்றைய தினத்தில் குறித்த அலுவலர் சார்பில் பதில் கடமையாற்றிய மோட்டார் கார் ஒப்படைப்பு பிரிவின் பிரதி ஆணையாளர் இப்பதிவை மேற்கொண்டுள்ளதுடன், குறித்த கோப்பு இது வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் கணனிக் கட்டமைப்பில் உள்ளடங்கியுள்ள தகவலுக்கு அமைவாக CAI – 0469ஆம் இலக்க வாகனத்தின் பதிவு இன்றவில் இரத்துச் செய்யப்பட்டு (De Register) இதனுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்பாகவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. 2022ஆம் ஆண்டின் விசேட கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விபரிக்கும் அறிக்கை

குழுக் கூட்டத்தின் உத்தரவுகள்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம்
2022ஆம் ஆண்டின் விசேட கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவின் மூலம் இதுவரை வெளிக்கொணரப்பட்ட தகவல்கள் மற்றும் அவ்வாறு வெளிக்கொணரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் தொடர்பாக இது வரை மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைககளை வெளிப்படுத்தும் அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பித்தல்.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2023.10.19ஆம் திகதிய PES/C/SPR/01/13 ஆம் இலக்க கணக்காய்வு அறிக்கையில் 9.2 தொடக்கம் 9.2.2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அலுவலர்கள் யாதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டிருப்பார்களானால், அது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்வதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் 2023.12.04 ஆம் திகதிய DMT/H/IN/2023 ஆம் இலக்க விசாரணை – XVII கடிதம் மூலமாக மூன்று பேரை கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. இதன் விசாரணைகளை மேற்கொண்டு அவதானிப்புக்கள் மற்றும் விதப்புரைகள் அடங்கிய அறிக்கையை 21 நாட்களுக்குள் வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் குறித்த குழு 2024.01.17ஆம் திகதி வரையில் மூன்று தடவைகள் கூடிய போதிலும் அதற்கு ஒப்படைக்கப்பட்ட பணி தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்காமலேயே அவர்கள் அலுவலகத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். பின்னர் 2024.08.28ஆம் திகதி மீண்டும் மூன்று பேரை கொண்ட குழு நியமிக்கப்பட்டு 06 மாதங்கள் கடந்துள்ள போதிலும் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

<u>இணைப்பு - II</u>

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின்
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை
மற்றும் தற்போதைய செயலாற்றுகை பற்றிய மீளாய்வு

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டம்
2025 மார்ச் 10 ஆம் திகதி, பி.ப 2.00

தேசிய கணக்காய்வு அலுவலகம்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்

1. பொதுவான விடயங்கள்

1.1 நிறுவுதல்

மோட்டார் வாகனப் பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்ளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 1928 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு மோட்டார் வாகனச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலமாக சட்ட ஏற்பாடுகள் அளிக்கப்ப்பட்டுள்ளன.

1.2 தூரநோக்கு

“தரநியம மற்றும் தொழில்நுட்பத்தை வினைத்திறனாக பயன்படுத்தி மோட்டார் வாகன மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதன் மூலம் பிரதிபலிப்புடைய நிறுவனமொன்றை கட்டியெழுப்புதல்”

1.3 பணிநோக்கு

“தன்முனைப்பாற்றலுடன் கூடிய பணியாட்தொகுதியின் ஒன்றிணைந்த முயற்சியினூடாகவும் போக்குவரத்துச் சட்டம் மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் மக்களுக்கு அர்ப்பணிப்புடனும் நவீன தொழிநுட்பத்துடன் கூடியதுமான மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சேவையை வழங்குதல்”

1.4 நோக்கங்கள்

- பயனுறுதிமிக்க, வினைத்திறனான தொழில்நுட்பத்தைக் கொண்டு திணைக்களத்தை வலுப்படுத்தல்.
- மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மூலமாக சிறந்த வாடிக்கையாளர் சேவையினை வழங்குதல்.
- பயனுறுதிமிக்க, வினைத்திறனான அலுவலகக் கட்டமைப்பை உருவாக்குதல்.
- சேவைகளின் செயன்முறைளை மேம்படுத்துவது தொடர்பான ஒழுங்குவிதிளை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

1.5 பிரதான பணிகள்

- பயணிக்கக்கூடிய மோட்டார் வாகனங்ளைப் புதிதாகப் பதிவு செய்தல்.
- வாகனங்களின் உரித்து ஒப்படைத்தலை பதிவு செய்தல்.
- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழில்நுட்பச் சேவைகளை வழங்குதல்.
- புகை வெளியேற்றல் தரத்தை ஒழுங்குபடுத்தல்.
- வீதிப் போக்குவரத்து தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

1.6 திணைக்களத்தின் கட்டமைப்பு

வாகனங்களின் பதிவு மற்றும் ஒப்படைப்பு தொடர்பான பணிகள் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்திலும் அதேபோன்று அநுராதபுரம், கம்பஹா, குருநாகல், ஹம்பாந்தோட்டை, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கிளைகள் ஊடாகவும் மேற்கொள்ளப்படுவதோடு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் வேரஹேர பிரதான அலுவலகம் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

2. **2019.10.23, 2019.09.06, 2019.02.20, 2018.10.12** மற்றும் **2018.07.06** ஆகிய தினங்களில் நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய அமர்வுகளில் வழங்கப்பட்ட உத்தரவுகளை நிறைவேற்றுவதில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றம்

தொடர் இல.	உத்தரவுகளுக்கான குறிப்பு	வழங்கப்பட்ட உத்தரவு	கணக்காய்வு அவதானிப்புகளும் தற்போதைய நிலைமையும்
2.1	2019.10.23 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவு இல 05	முறையாக சுங்கக் கணினி கட்டமைப்புடன் திணைக்களம் இணைந்தது எப்போது, இன்றளவில் சுங்கக் கணினி வலையமைப்புடன் எந்தந்த வாகன வகுதிகளுக்காக இணைப்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன, இதுவரை சுங்கக் கணினி வலையமைப்புடன் இணைக்கப்படாத வாகன வகுதிகள் இருப்பின், அவை யாவை, மற்றும் மேற்படி வாகன வகுதிகள் எப்போது சுங்கக் கணினி வலையமைப்புடன் இணைக்கப்படும் போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கையினை குழுவிற்கு சமர்ப்பித்தல்.	குழுவின் உத்தரவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை.
		சுங்கக் கணினிக் கட்டமைப்புடன் இணைவதற்கு முன்னதாக, இடம்பெற்ற சட்ட விரோதமான வாகனப் பதிவுகள்	குழுவின் உத்தரவின் பிரகாரம்

		தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 25 விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை மற்றும் மேற்படி நடவடிக்கைகளுக்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளிட்ட தற்போதைய நிலைமையை தனித் தனியாக விபரிக்கும் அறிக்கையினை குழுவிற்கு சமர்ப்பித்தல். குழுவினால் உத்தரவிடப்பட்ட சகல அறிக்கைகளினதும் பிரதிகள் அன்றைய தினமே தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கும் சமர்ப்பித்தல்.	நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை குழுவின் உத்தரவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை
2.2	உத்தரவு இல 07	302 ஆம் வகுதியின் கீழ் பிற்காலத்தில் பதிவு செய்யப்பட்ட 10 வாகனங்கள் தொடர்பாக நிறுவன மட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியன்று அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தி விசாரணை நடவடிக்கைகளை துரிதமாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளுதல்.	விசாரணை நடாத்தப்பட்டு அது தொடர்பான அறிக்கையினை தயாரித்து மோசடியுடன் தொடர்புடைய ஆட்கள் மற்றும் அலுவலர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை.
2.3	உத்தரவு இல 08	இ-மோட்டரிங் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை மற்றும் கருத்திட்டம் செயற்படவுள்ள திகதி விபரங்கள் அடங்கிய அறிக்கையினை 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பித்தல்.	முன்னதாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட இக் கருத்திட்டம் தொடர்பாக எழுந்துள்ள சட்ட ரீதியான

			மற்றும் நடைமுறை இடையூறுகளை ஆய்வு செய்து புதியதொரு கருத்திட்டமாக இ மோட்டரிங் கருத்திட்டத்தை செயற்படுத்தும் சாத்தியக்கூறு தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்கப்பட வில்லை.
2.4	உத்தரவு இல 08	இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் குறைபாடுகளுடன் அனுப்பப்பட்ட தரவுகளை பயன்படுத்தி விடுவிக்கப்படாத 07 வாகனங்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டமை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை குழுவிற்கு அறிவித்தல்.	மேற்படி 07 வாகனங்களின் பதிவை இரத்துச் செய்து போலி ஆவணங்களை சமர்ப்பித்த மற்றும் அதற்கு உடந்தையாக யிருந்த அலுவலர்களுக்கு எதிராக தண்டனைச் சட்ட கோவையின் கீழ் செயற்படுவதற்கு அதிகார நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்யவில்லை

2.5	உத்தரவு இல 10	சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை திணைக்களத்துக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது BOO அடிப்படையின் கீழ் புதிய கொள்வனவு நடவடிக்கைகளை திட்டமிடல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டை அரசுக்கு சுவீகரித்து மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்படுவதாக தெரிவிப்பதற்கான காரணங்களை குறிப்பிட்டு 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அறிக்கை சமர்ப்பித்தல்.	அவ்வாறான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவி ல்லை.
2.6	2019.09.06 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவு இல 07	மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனப் பதிவு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பில் காணப்படும் பிரச்சனைகள் தொடர்பாக மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் கட்டமைப்பு சார்ந்த கணக்காய்வொன்றை மேற்கொள்ளுதல்.	குழுவின் உத்தரவின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப் படவில்லை
2.7	2019.02.20 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவு இல 5-IV	வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகளை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.	உத்தரவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. .
2.8	2018.10.12 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவு இல 6-IX	5 டிராக்டர் சேசிஸ் இலக்கங்கள் மற்றும் 2 தெளிவற்ற சேசிஸ் இலக்கங்களின் கீழ் போலியாக பதிவு செய்யப்பட்டுள்ள ஏழு பிராடோ வகை ஜீப் வண்டிகள் தொடர்பான விசாரணையின் முன்னேற்றத்தை குழுவிற்கு அறிவித்தல்.	பொது நிருவாக அமைச்சினால் மேற்கொள்ளப் பட்ட விசாரணையின் விதப்புரைகளின் பிரகாரம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு எதிராக குற்றப்பத்திரி

			கை வழங்கப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவில்லை.
2.9	2018.07.06 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவு இல 07-11	நாடு முழுவதும் அமைந்துள்ள சகல மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான எழுத்து மூல பரீட்சையினை இணைய வழியாக நடாத்துவதற்கு தேவையான வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் விதம் குறித்து விபரிக்கும் அறிக்கையினை குழுவிற்கு சமர்ப்பித்தல்.	சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பொறுப்பை பெற்ற வேரஹேர தலைமை அலுவலகம் தவிர இதர 25 மாவட்ட அலுவலகங்களில் எந்தவொரு அலுவலகத்திலும் இணையவழி முறையில் பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான வகையில் கட்டமைப்புகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

3. <u>2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கும் விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மீதான மீளாய்வு</u>

3.1 அப/16/1307/709/061 மற்றும் 2016 செத்தெம்பர் 07ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், சட்டரீதியான சுங்க செயன்முறையிலிருந்து விலகி இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களை அவற்றின்

எரிபொருள் கொள்திறனை அடிப்படையாகக் கொண்டு மிகைவரி அறவீட்டுக்கு உட்பட்டதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்தல்.

I. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 201– 250CC எஞ்சின் வலுவினைக் கொண்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் மீது ரூ.200,000 மிகைவரி அறவிடப்பட வேண்டிய போதிலும், இத்துடன் உடன்படாதவாறு, ரூ.50,000 முதல் ரூ.65,000 வரையிலான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டு 55 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற வேண்டிய ரூ.8,080,000 வருமானத்தை அரசாங்கம் இழக்க நேரிட்டுள்ளது.

II. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 251– 450CC எஞ்சின் வலு கொண்ட மோட்டார் சைக்கிள்களின் மீது அறவிடப்பட வேண்டிய மிகை வரியானது ரூ.350,000 என அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் இத்துடன் உடன்படாத வகையில் ரூ.50,000 முதல் ரூ.300,000 கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டு 241 மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்திருத்தல் காரணமாக அரசாங்கத்துக்கு கிடைக்கப்பெற வேண்டிய ரூ.70,070,000 வருமானத்தை அரசாங்கம் இழக்க நேரிட்டுள்ளது.

III. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொதுமக்களுக்கு குறிப்பிட்ட சலுகைகள் குறித்து ஊடக அறிவித்தல் வெளியிடப்பட்ட 2016 ஓகஸ்ட் 30ஆந் திகதி முதல் 04 மாத கால சலுகைக் காலத்தினுள் பதிவு செய்தல் நிறைவு செய்யப்பட வேண்டியபோதிலும், குறிப்பிட்ட நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி முதல் 05 மாத காலப்பகுதிக்குள் அமைச்சரவை அங்கீகாரமின்றியும் பதிவு செய்வதற்குத் தேவையான சட்டரீதியான பத்திரங்கள் இன்றியும் 3088 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3.2 முந்திய வாகன பதிவு இலக்கங்களின் கீழ் முறைமையில் சேர்க்கப்பட்டுள்ள அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி மோசடியான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை உட்புகுத்தியவாறு மோசடியான விதத்தில் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருத்தல்.

I. நீண்டகாலமாக வருமான உத்தரவாதப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள 99 பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி ஏனைய மோசடியான முறையில்

இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை மோசடியான முறையில் உட்புகுத்தியவாறு குறிப்பிட்ட பழைய பதிவு இலக்களுக்கு புதிய மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருத்தல்.

II. மோட்டார் வாகன பதிவு தரவு முறைமையில் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ள அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை உட்புகுத்தியவாறு பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள 91 மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் கொள்திறனைக் கருத்தில் கொள்ளுமிடத்து செல்லுபடியாகும் சுங்க பதிவேட்டுடன் இறக்குமதி செய்யப்படாமையால் ரூ.55,207,475 பெறுமதியான சுங்க வரி வருமானத்தை அரசாங்கம் இழக்க நேரிட்டுள்ளது.

III. இலங்கைக்கு சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஆனால், பதிவு செய்யப்படாதுள்ள மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி 3.1இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், குறிப்பிட்ட மிகைவரியை அறவிடாது பழைய இலக்கங்களின் கீழ் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமையால் 91 வாகனங்களுக்கான ரூ.21,285,000 மிகைவரி கட்டணத்தையும் ரூ.191,000 புதிய பதிவுக்கான கட்டணத்தையும் அறவிட முடியாமற்போயுள்ளது.

IV. பிறிதொரு வாகன வகுப்புக்கு ஏற்புடையதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 31 வாகனங்களின் அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி மோசடியாக முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை உட்புகுத்தியவாறு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருத்தல்

V. முன்கூட்டியே வருமான உத்தரவாதப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பிறிதொரு வாகன வகுப்புக்கு ஏற்புடையதாக பதிவு செய்யப்பட்டுள்ள 29 வாகனங்களின் அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி ஏனைய சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் உட்புகுத்தப்பட்டிருத்தல்.

VI. முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ள 11 மோட்டார் கார்களின் அடிச்சட்ட இலக்கங்கள் மற்றும் எஞ்சின் இலக்கங்களை மாற்றி சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள கார் வண்டிகளின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் உட்புகுத்தப்பட்டிருத்தல்.

VII. முறைமையினுள் காணப்பட்ட பழைய வாகனங்களின் தரவுகளை மாற்றிய, 11 சொகுசு ஜீப் வண்டிகள் உள்ளிட்ட 14 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருத்தல் காரணமாக, செலுத்தப்பட வேண்டியிருந்த உற்பத்தி வரி, சொகுசு வரி மற்றும் ஏனைய அரசாங்க அறவீடுகளான ரூ.499,569,300 வருமானத்தை அரசாங்கம் இழக்க நேரிட்டது..

VIII. சுங்க வரி செலுத்தாது சட்ட விரோதமாக இந்நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள அல்லது இந்நாட்டினுள் சட்ட விரோதமாக பொருத்தப்பட்டுள்ள 28 வாகனங்களின் தரவுகளை திணைக்களத்தின் கனணி முறைமையினுள் உட்புகுத்தியவாறு இந்த வாகனங்களை சட்டரீதியான வாகனங்களாக இந்நாட்டில் பாவனைக்கு விடுவித்திருப்பதன் காரணமாக இதில் 17 வாகனங்களிருந்து மாத்திரம் சுமார் உற்பத்தி வரி, சொகுசு வரி மற்றும் ஏனைய அரச அறவீடுகளாக ரூ.553,789,127 வருமானத்தை இழக்க நேரிட்டது..

IX. நீண்ட காலமாக வருமான உத்தரவாதப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாது நிலுவை வருமான அனுமதிப்பத்திர கட்டணங்களைக் கொண்டுள்ள 4 பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை மாற்றி ஏனைய சட்டரீதியற்ற முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 4 மோட்டார் சைக்கிள்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை உட்புகுத்தி மோசடியான முறையில் 2022ஆம் ஆண்டில் மோட்டார் வாகனங்க பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருத்தல்.

X. பதிவு இலக்கம் KE – 4103 இன் கீழ் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்டுள்ள CEYGRA வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றின் தரவுகளை போலியான முறையில் மாற்றி MITSUBISHI PAJERO வகை மோட்டார் வாகனத்தின் தரவுகளை உட்புகுத்தியவாறு 2019ஆம் ஆண்டில் மோட்டார் வாகன பதிவு சான்றிதழை மோசடியான முறையில் வழங்கியதன் காரணமாக தண்டப் பணம் உள்ளிட்டதாக ரூ.757,500 சொகுசு வரி வருமானத்தையும் ரூ.35,200,000 உற்பத்தி வரி வருமானத்தையும் இழக்க நேரிட்டது..

XI. மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் தரவு முறைமைக்கு ஏற்ப KE – 3846 ஆம் இலக்கத்தின் கீழ் CRYGRA வகை மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளபோதிலும் 2018ஆம் ஆண்டில் குறிப்பிட்ட தரவுகளை மாற்றி MINICOOPER வகை மோட்டார் வாகனத்தின் தரவுகளை உட்புகுத்தியவாறு மோட்டார் வாகன பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக ரூ.5,513,000 உற்பத்தி வருமான வருமானத்தையும் ரூ.44,050 புதிய பதிவுக் கட்டண வருமானத்தையும் இழக்க நேரிட்டது.

XII. மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் தரவு முறைமைக்கு ஏற்க KE– 4521ஆம் எனும் பதிவு இலக்கத்தின் கீழ் CEYGRA வகை பெற்றோல் மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளபோதிலும் 2018ஆம் ஆண்டில் குறிப்பிட்ட தரவுகள் மாற்றப்பட்டு TOYOTA வகை டீசல் மோட்டார் வாகனமொன்றின் தரவுகளை உள்ளடக்கியவாறு பதிவு சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக ரூ.49,920,000 உற்பத்தி வரி வருமானத்தை இழக்க நேரிட்டது.

XIII. இரட்டைப் பயன்பாட்டு வாகனங்களுக்கான பதிவு இலக்கத்தின் கீழ் விசேட கருமங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களை பதிவு செய்ததன் காரணமாக 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் 09 வாகனங்களுக்கான ரூ.27,472,988 சுங்க வரி வருமானத்தை இழக்க நேரிட்டது.

3.3 பயன்படுத்தப்படாத வெற்று இலக்கங்களுக்கு மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களை மோசடியான முறையில் வழங்கியிருத்தல்.

I. முன்னர் பதிவு செய்யப்படாத 06 பதிவு இலக்கங்களுக்கு, மோசடியான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனங்களின் எஞ்சின் இலக்கங்கள் மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் உள்ளீடுசெய்யப்பட்டு, அண்மைய பதிவு இலக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள திகதிகளுடன் பொருந்தும் வகையில் செல்லுபடியாகும் மோட்டார் வாகன பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (வாகன வருமான உத்தரவுப்பத்திரங்களை வழங்கும் ERL தரவுத்தள கட்டமைப்பின்படி, முன்னைய ஆண்டுகளில் வாகன வருமான உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை.)

II. மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்படாத பழைய வெற்று இலக்கமொன்றான 253-3462 இன் கீழ் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அம்பாந்தோட்டை கிளையினால் 2021 டிசம்பர் 03ஆந்

திகதி சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட அல்லது பொருத்தப்பட்ட வாகனமொன்றிற்கு வாகனப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. (விபரங்கள் பின்வருமாறு)

- மேற்கூறிய பதிவு இலக்கமானது கணனிக் கட்டமைப்பில் போலியான தகவலுடன் உள்ளீடு செய்யப்பட்டு, ஆரம்பப் பதிவுத் திகதி 2000 ஆகஸ்ட் 17 ஆந் திகதி என்றும், வாகனம் உற்பத்தி செய்யப்பட்ட வருடம் 1997 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மோசடியான முறையில் உள்ளீடு செய்யப்பட்ட ஆரம்பப் பதிவுத் திகதியான 2000 ஆகஸ்ட் 17ஆந் திகதி தொடக்கம் 2021 டிசம்பர் 31ஆந் திகதி வரையான நிலுவையிலுள்ள வாகன வருமான உத்தரவுப்பத்திரக் கட்டணம் மற்றும் அபராதத் தொகையாக ரூ.195,865 பணத்தொகை 2021 டிசம்பர் 31ஆந் திகதி ஒரே தடவையில் செலுத்தப்பட்டு வாகன வருமான உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

- இந்த வாகனத்தை மாற்றிக்கொடுப்பவர் மேல் மாகாணத்தைச் சேர்ந்த ஒருவராகவும் மாற்றிப் பெறுபவர் வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த ஒருவராகவும் இருந்தபோதிலும் 02 மாகாணத்திற்கும் சம்பந்தப்பட்டாத மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் அம்பாந்தோட்டை கிளையியினால் பதிவு மற்றும் உரிமை மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இந்த இரட்டை பயன்பாட்டு வாகனத்திற்கு மோசடியான முறையில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழை வழங்கியதன் காரணமாக கிட்டத்தட்ட ரூ. 6,000,000 அளவிலான உற்பத்தி வரி வருமானம், ரூ.181,500 அளவிலான சொகுசு வரி வருமானம் மற்றும் ரூ. 23,800 அளவிலான மோட்டார் வாகன பதிவுக் கட்டண வருமானம் ஆகியவற்றை இழக்க நேரிட்டுள்ளது.

- 253-3460 தொடக்கம் 253-3465 வரையிலான மோட்டார் வாகனங்களின் ஆரம்பப் பதிவுக் கோப்புக்களை பரிசோதிக்கின்ற போது இலக்கம் 253-3462 ஐத் தவிர 253–3460 தொடக்கம் 253-3465 வரையிலான பதிவு இலக்கங்களுக்காக இணை தொடர் இலக்கங்களை கொண்ட பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பதன் காரணமாக 253-3462 இலக்கம் முன்னைய பதிவினை கொண்ட இலக்கமாக இல்லாததாலும், உரிமை மாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிவுச் சான்றிதழின் இலக்கமானது அதே வகையின் பதிவுச் சான்றிதழ்களின் இலக்கங்களுடன் பொருந்தவில்லை என்பதாலும், அந்தப் பதிவுச் சான்றிதழில் ஆணையாளரின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும் போலியாக காணப்பட்டதன் காரணமாகவும் உரிமை மாற்றத்திற்காக

மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதலொன்று போலியான முறையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

- மேற்படி உரிமை மாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழின் உரிமையாளர் மற்றும் மாற்றிக்கொடுப்பவர் என அடையாள அட்டையின் பிரதியொன்றுடன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர் ஒரே நபரல்ல என்பதோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை போலியான அடையாள அட்டை என்பதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

- உரிமை மாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாகன வருமான உத்தரவுப்பத்திரமானது மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சட்டபூர்வமான, செல்லுபடியான வாகன வருமான உத்தரவுப்பத்திரமொன்றல்ல என மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கணக்காய்வுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

- கண்காணிப்பு இலக்கம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள 6 வாகனங்களில் ஒன்றான GC-9661 இலக்கமுடைய பதிவு இலக்கத்தை கொண்ட வாகனமும், மேலே 253-3462 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றிக்கொடுப்பவரிடமிருந்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றிப்பெறுபவருக்கே உடைமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3.4 இரத்துச்செய்யப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திர வாகன இலக்கங்களுக்கு பிற வாகனங்களைப் பதிவு செய்தல்.

I. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் தீர்வை வரியின்றி இறக்குமதி செய்யப்பட்டு KA-0256 என்ற இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஜீப் வண்டியொன்று 2011ஆம் ஆண்டில் டுபாய் நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதால் அதன் பதிவு இரத்துச் செய்யப்பட்டது. எனினும், இரத்து செய்யப்பட்ட அந்த இலக்கத்தைப் பயன்படுத்தி மற்றொரு வாகனத்தின் அடிச்சட்ட இலக்கம் மற்றும் எஞ்சின் இலக்கம் உப்புகுத்தப்பட்டு, ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு மோட்டார் வாகனமொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

II. வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்காகப் பதிவுசெய்யப்பட்டு, பின்னர் மீள் ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பங்களில் பதிவு இரத்துச்செய்யப்பட்ட 06 வாகனங்களுக்கு போலியான முறையில் பிற சொகுசு வாகனங்களின் அடிச்சட்ட இலக்கம் மற்றும் எஞ்சின் இலக்கம்

உப்புகுத்தப்பட்டு பதிவுசெய்யப்பட்டிருப்பதன் காரணமாக சொகுசு வரி மற்றும் ஏனைய அறவீடுகள் தவிர்த்து இலங்கை சுங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூ. 122,282,900 பெறுமதியான வரி வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளது.

3.5 வாகனப் பதிவு இலக்கங்களை தொடர் இலக்க வரிசைப்படி வழங்குவதற்குப் பதிலாக சில இலக்கங்களை வெறுமையாக வைத்து வாகனங்களை பதிவுசெய்துள்ளமை.

I. வாகனப் பதிவு இலக்கங்களை வரிசைப்படி வழங்குவதற்குப் பதிலாக சில இலக்கங்களை வெறுமையாக வைத்து விட்டு வாகனங்களை பதிவுசெய்திருந்ததோடு பின்னர் அந்த வெற்று இலக்கத்தின் கீழ் கணனிக் கட்டமைப்பினுள் பொய்யான தரவுகளை உள்ளீடுசெய்து, புதிதாக 05 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் மொத்தமாக சொகுசு வரி, உற்பத்தி வரி மற்றும் பிற அரசாங்க அறவீடுகளாக ரூ. 4,643,800 தொகையை அரசாங்கம் இழக்க நேரிட்டுள்ளது.

II. வாகனப் பதிவு இலக்கங்கள் தொடர் இலக்க வரிசைப்படி வழங்கப்பட வேண்டிய போதிலும் சில இலக்கங்களை வெறுமையாக வைத்துவிட்டு, பின்னர் அந்த வெறுமையான இலக்கத்தைப் பயன்படுத்தி போலியான முறையில் வாகனங்களை பதிவுசெய்துள்ள போதிலும் குறித்த வெற்று இலக்கம் மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்ட அல்லது செயலிழக்கச் செய்யப்பட்ட வாகனப் பதிவு இலக்கங்களை மீண்டும் பயன்படுத்த முடியாதபடி கணனிமயமாக்கப்பட்ட தகவல் கட்டமைப்பின் மூலம் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

3.6 மோட்டார் வாகனமொன்றின் சில பாங்களை பொருத்துதல் என்ற போர்வையில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்தல்.

I. மோட்டார் வாகனச் சட்டத்தின் 203 ஆம் பிரிவின் படி பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் அடிச்சட்ட இலக்கத்தை மாற்றி முன்னைய பதிவினை பேணிச்செல்ல முடியாத போதிலும் முறையான செல்லுபடியான, தர்க்கரீதியான காரணமின்றி 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட 237 வாகனங்களினதும் 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 301 வாகனங்களினதும் அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்டு முன்னைய பதிவினை பேணிச்செல்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்ட மேற்படி வாகனங்களுக்கு முன்னைய அடிச்சட்ட இலக்கத்தின் கீழ் பல வருடங்களாக வாகன வருமான

உத்தரவுப்பத்திரம் பெறப்பட்டிருத்தல், மேற்படி வாகனங்களின் சட்டரீதியான உரிமை 5 தடவைகளுக்கு மேலாக கைமாறப்பட்டிருத்தல், சில வாகனங்களுக்கு மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் மூலம் பெறப்பட்டுள்ள நிறைச் சான்றிதழில் அடங்கியுள்ள தரவுகளுக்குப் பதிலாக வேறு தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டிருத்தல் போன்ற விடயங்களைக் கவனத்திற்கொள்ளும்போது மேற்படி தரவுத் திருத்தங்களின் சட்டபூர்வத்தன்மை சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது.

II. மோட்டார் வாகனச் சட்டத்தின்படி மோட்டார் வாகனமொன்றை பொருத்தும்போது அடிச்சட்டத்தை தவிர பிற பாகங்களை மாற்ற முடியும் என்றாலும் 2022 ஆம் ஆண்டில் பெற்றோல் வாகனத்தை டீசல் வாகனமாக மாற்றிய 27 தடவைகளில் அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்டு மோட்டார் வாகனங்களை பொருத்துதல் என்ற போர்வையில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

III. பெற்றோல் மோட்டார் வாகனமொன்றை டீசல் மோட்டார் வாகனமொன்றாக மாற்றும்போது பழைய மோட்டார் வாகனப் பதிவு இலக்கத்தை தரவுத்தளத்திலிருந்து நீக்க வேண்டிய போதிலும் 130 தடவைகளில் மாற்றப்பட்ட மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய பதிவு இலக்கங்கள் தரவுத்தளத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

IV. எஞ்சின் இலக்கம் மற்றும் அடிச்சட்ட இலக்கம் ஆகிய இரண்டும் ஒரே இலக்கமாக கணனிக் கட்டமைப்பில் தரவுகளாக உள்ளீடுசெய்யப்பட்டு, முன்னர் பதிவுசெய்யப்பட்டிருந்த 03 வாகனங்கள் பொருத்தப்பட்டு, அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்டு, சட்டவிரோதமான வேறு 03 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

3.7 போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டமை தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை.

I. சுங்கத் திணைக்களத்தினுள் இன்னும் விடுவிக்கப்படாத ஒரு கொள்கலன் தொடர்பாக மோசடியாக தயாரிக்கப்பட்டுள்ள இலக்கம் CBHQ I 49824 உடைய சுங்கப் பதிவினை பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டும் பதிவு செய்வதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளதுமான 02 சொகுசு மோட்டார் வாகனங்கள் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக சுங்கத் திணைக்களத்துடன் கூட்டு விசாரணை நடத்தப்பட்டு, மேற்படி சட்டவிரோத பதிவுசெய்தலை இரத்துச் செய்து, உரிய சுங்க வரியை அறவிட்டுக்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக

சட்டரீதியாக மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

II. பதிவு இலக்கம் CAW-1727 உடைய மோட்டார் வாகனமானது, அதன் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரால் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆந் திகதி கொஹுவல, நுகேகொடையைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டது. வாகனத்தை கொள்வனவுசெய்த நபர் இந்த வாகனத்தை மீள் விற்பனை செய்வதற்காக கொஹுவலை பிரதேசத்தில் அவருக்குச் சொந்தமான வாகன விற்பனை நிலையத்தில் வாகனத்தை வைத்திருந்தபோது, பன்னிப்பிட்டிய, மாலபே வீதியைச் சேர்ந்த ஒரு பெண், இந்த வாகனத்திற்கான பதிவுச் சான்றிதழின் இரண்டாவது பிரதியை சட்டவிரோதமாகப் பெற்று, பின்னர் வாகனப் பதிவுச் சான்றிதழின் இரண்டாவது பிரதியை மூலப்பிரதியாக மாற்றி, போலியான முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுடன் குத்தகை நிறுவனமொன்றிடமிருந்து நிதி உதவியைப் பெற்றிருந்த போதிலும், போலி ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பில் முறையான விசாரணையை நடாத்தி, தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

III. பதிவு இலக்கம் 32-4488 உடைய வாகனத்திற்கு நீண்ட காலமாக வாகன வருமான உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக மீளவும் கடந்த 20 வருட காலத்திற்கான வாகன வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2023 ஜூலை 07ஆந் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில் குருநாகல் மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு, மோட்டார் வாகன ஆணையாளர் - விசாரணையாளரின் பதவி முத்திரையை கொண்ட போலி ஆவணமொன்றை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அந்தப் போலி ஆவணம் தொடர்பாக முறையான விசாரணையை மேற்கொண்டு, சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

IV. பதிவு இலக்கம் BDA-7847 என்ற மோட்டார் சைக்கிளின் உரிமையாளருக்குத் தெரியாமல் திருடப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்தி வேறு இரண்டு நபர்களுக்கு உரிமை மாற்றப்பட்டுள்ளதோடு, அந்த உரிமை மாற்றங்கள் குறித்து முறையான விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

3.8 முன்னைய பதிவு இல்லாமல் முப்படையினரால் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

I. முன்னர் பதிவு செய்யாமல் முப்படையினர் பயன்படுத்திவிட்டு விலைமனுக்கோரல் செயல்முறை மூலம் சிவில் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள 63 வாகனங்கள் மோட்டார் வாகனச் சட்டத்தின் 20ஆம் பிரிவிற்கு உட்படாத வகையில் மேற்படி அடிப்படை ஆவணங்கள் எதுவுமின்றி தொகுதி இலக்கம் 325 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டு சிவில் நபர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

II. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கோப்புகளின்படி, முப்படையினரால் அனுப்பப்பட்ட விலைமனு விபரங்களுடன் பொருந்தாத மற்றும் விலைமனுக்கோரல் விபரங்கள் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள ஆணையாளருக்கு தெரியப்படுத்தாத, முப்படையினரின் 40 வாகனங்கள் 325 வகையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

III. முப்படையின் பொறுப்பான அதிகாரி ஒருவரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 8 வாகனங்கள், தொடர்புடைய விலைமனுக்கோரப்பட்ட திகதிகளுக்கு முன்னைய திகதிகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு சிவில் நபர்களுக்கு உரிமை மாற்றப்பட்டுள்ளன.

IV. முப்படையினர் வாகனங்களை விலைமனுக்கோரியுள்ள திகதிகளுக்கு முன்னைய திகதிகளில் குறித்த வாகனங்களின் ஆரம்பப் பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பது புலனாகும் வகையில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவுத்தளத்தில் பொய்யான தரவுகளை உள்ளிட்டு 29 வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

V. முப்படையினரால் விலைமனுக்கோரப்பட்டு சிவில் நபர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ள 04 அடிச்சட்ட இலக்கங்களுக்கு, அதே அடிச்சட்ட இலக்கத்தைக் கொண்டு வேறு சில வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

VI. அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், முப்படையினர் அல்லது நிதி நிறுவனங்களால் ஏதேனும் பதிவு செய்யப்பட்ட வாகனமொன்றின் சிதைவுப் பாகங்கள் அகற்றப்படும்போது, அகற்றப்படும் வாகனங்களின் பதிவை இரத்துச் செய்வதற்குத் தேவையான சட்ட மற்றும் நடைமுறை கட்டமைப்புகள் உருவாக்கப்படவில்லை.

3.9 வேரஹெர சிற்றுண்டிச்சாலை மற்றும் குத்தகைக்கு விடப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களிடமிருந்து குத்தகைப் பணத்தை அறவிடல்.

I. பெறுகைக் குழுவின் தீர்மானத்திற்கமைய 2019-2020 வரையான ஒரு வருட காலப்பகுதிக்கு வேரஹெர சிற்றுண்டிச்சாலையானது மாதாந்தம் ரூ.391,000 இற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் குத்தகைதாரர் 2021 மார்ச்சு 31ஆம் திகதி வரையில் சிற்றுண்டிச்சாலையை நடத்திச் சென்றுள்ளார். குத்தகைதாரரிடமிருந்து குத்தகை நிலுவைப் பணமாக ரூ. 2,964,400 அறவிடப்பட வேண்டியிருந்த நிலைமையில் ரூ.1,173,000 செயலாற்றுகை பிணைப்பத்திரத்தின் அடிப்படையில் அவரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

II. மேற்படி சிற்றுண்டிச்சாலையானது மீண்டும் 2021 தொடக்கம் 2023 வரையான காலப்பகுதியினுள் வேறொரு நபருக்கு ரூ. 261,000 என்ற அடிப்படையில் மாதாந்தக் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 1,133,000 நிலுவை வருமானம் அறவிடப்படாமல் சிற்றுண்டிச்சாலையில் இருந்த குத்தகைதாரரின் சொத்துக்களை அகற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

III. கடந்த 5 ஆண்டுகளில் தலைமை அலுவலகம் மற்றும் வேரஹெர வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள சிற்றுண்டிச்சாலைகளைத் தவிர ஏனைய நிறுவனங்களிலிருந்து ரூ. 2,507,600 நிலுவை வருமானமாக அறவிடப்பட வேண்டியிருப்பினும் அந்த வருமானத்தை அறவிட்டுக்கொள்வதற்கோ அல்லது அதனை நிலுவை வருமானமாக கணக்குகளில் உள்ளடக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.10 வாகனங்களுக்கான ஆட்சேபனைகளைக் கோப்பிடுதல் மற்றும் கறைநிரற் பட்டியலிடுதல்.

I. 2020ஆம் ஆண்டில் முறையான எழுத்துமூல அங்கீகாரமின்றி 115 வாகனங்கள் மற்றும் அடிச்சட்ட (செசி) இலக்கங்கள் கரைநிரற் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், கறைநிரற் பட்டியற்படுத்தப்பட்டிருந்த 81 வாகனங்கள் மற்றும் அடிச்சட்ட (செசி) இலக்கங்கள் மேற்படி பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தன.

II. 2015 டிசம்பர் தொடக்கம் 2019 மே வரையான காலப்பகுதியினுள் 600 வாகனங்களின் பதிவை இரத்துச் செய்வதற்கு திணைக்களத்தின் தொழில்நுட்பப் பிரிவு விதப்புரைகளை வழங்கியிருந்த போதிலும், அவற்றை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், மேற்படி காலப்பகுதியினுள் தொழில்நுட்பப் பிரிவு பரிந்துரைக்காத 223 வாகனங்களின் பதிவுகள் இரத்து செய்யப்பட்டிருந்தன.

3.11 மோட்டார் வாகனச் சட்டத்திற்கு (அத்தியாயம் 203) இணங்கியொழுகாத வகையில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தமை.

I. மோட்டார் வாகனச் சட்டத்தின் (203ஆம் அத்தியாயத்தின்) XIIஆம் பகுதியிலுள்ள குறைநிரப்பு ஏற்பாடுகள் இலக்கம் 231 இற்கு இணங்கியொழுகாத வகையில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களின் இரண்டாவது நகல் பிரதி வழங்கப்பட்டு 5 தொடக்கம் 25 ஆண்டுகள் வரையிலான காலத்திற்குப் பிறகு, 2023ஆம் ஆண்டில் 264 சந்தர்ப்பங்களிலும், 2024 ஆம் ஆண்டில் 860 சந்தர்ப்பங்களிலும், முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழ்களின் இரண்டாவது நகல் பிரதிக்குப் பதிலாக மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி வழங்கப்பட்டிருந்தது.

II. வாகனப் பதிவுச் சான்றிதழின் இரண்டாவது நகல் பிரதிக்கு மூலப் பிரதிகள் வழங்கப்பட்ட 06 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நடத்தப்பட்ட விசாரணையின்போது மேற்படி பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 சத்தியவோலைகள் ஒரே கையெழுத்திலும் ஒரே வடிவத்திலும், ஏனைய 03 சத்தியவோலைகள் ஒரே வடிவத்திலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

3.12 CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்களை வழங்குதல்

இலங்கை சுங்கத்தினால் சுங்கக் கட்டணங்களை அபராதமாக அறவிட்ட பிறகு விடுவிக்கப்பட்ட வாகனங்களை பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் இல்லாவிட்டால், அடிச்சட்ட இலக்கத்திற்கு (செசி) அருகில் CMT என்ற மூன்று எழுத்துக்களையும் தொடரிலக்கமொன்றையும் பொறித்து அதன் இருபுறமும் அரச இலச்சினையைப் பொறித்து CMT அடிச்சட்ட (செசி) இலக்கமொன்றினை வழங்குவதற்கு 2016 இல் குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்கள் வழங்குவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் இல்லாவிட்டால் மட்டுமே CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்களை வழங்குவதற்கு தீர்மானம் மேற்கொண்டிருந்த போதிலும் அதனை மீறும் வகையில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் 80 சந்தர்ப்பங்களில் CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2025 பெப்ரவரி மாதமளவில் 1761 CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன்படி,

வாகனங்கள் CMT இலக்கங்களின் கீழ் மோசடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் CMT அடிச்சட்ட (செசி) இலக்கங்களை பொறிக்குமாறி அறிவித்து அரச கைத்தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 06 வாகனங்கள் சாதாரண வாகனங்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

- புதிய அடிச்சட்ட (செசி) இலக்கம் வழங்கப்பட்ட பின்னர் ஏற்கனவே இருந்த அடிச்சட்ட (செசி) இலக்கத்தை இரத்துச் செய்தல் வேண்டும். இருப்பினும் பழைய மற்றும் புதிய அடிச்சட்ட (செசி) இலக்கங்களில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் ஒரே அடிச்சட்ட (செசி) இலக்கத்தின் கீழ் 02 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

- 2016ஆம் ஆண்டு மேல் நீதிமன்றத்தால் அரசுடைமையாக்கி உதிரிப் பாகங்களுக்காக விற்பனை செய்ய உத்தரவிடப்பட்டிருந்த மிட்சுபிஷி பஜெரோ வாகனமொன்றுக்கு CMT அடிச்சட்ட (செசி) இலக்கம் வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தது.

3.13 சாரதி அனுமதிப் பாத்திரங்களை அச்சிடுதல்

சாரதி அனுமதிப் பத்திரமொன்று ரூ. 1,340 வீதம் வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் 2016 மார்ச்சு மாதம் 26ஆம் திகதி காலாவதியாகியிருந்த போதிலும், முறையான பெறுகைச் செயன்முறை மூலம் புதிய வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் முன்னைய விலைக்கூறுகளின் கீழ் 05 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தக் காலத்தை நீடித்து மேற்படி ஒப்பந்தமானது அந்த வழங்குநருக்கே 2020 யூன் மாதம் 30 வரையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2020 யூன் 01ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு மேற்படி வழங்குநரால் சாரதி அனுமதிப் பத்திரமொன்று ரூ. 1,000 என்ற வகையில் அமையுமாறு ரூ. 340ஐக் குறைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய பணவீக்கம் மற்றும் வெளிநாடுகளில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது தொடர்ந்து சரிந்து வந்த நிலையில் ஓர் அலகின் விலையை ரூ. 340ஆல் குறைப்பதற்கு இணங்கியதனூடாக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு அறவிடப்பட்ட ரூ.1,340 எனும் செலவானது அதிக இலாப வரம்பைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த வகையில் அரச நிதிகளின் சிறந்த கையாளுகைகள் தொடர்பில் வினைத்திறன்மிக்கதான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அமைச்சுக்கள்/திணைக்களங்களின்

முகாமைத்துவங்கள் தவறியதன் காரணமாக 2016 மார்ச்சு மாதம் தொடக்கம் 2020 யூன் மாதம் வரையிலான 51 மாத காலப்பகுதியினுள் அச்சிடப்பட்ட 3,075,625 சாரதி அனுமதிப் பத்திரங்களுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு சிக்கனமின்றிய வகையில் செலுத்தப்பட்டுள்ள அரச நிதியின் அளவு அண்ணளவாக ரூ. 1,045,712,500 என்பது அவதானிக்கப்பட்டது.

3.14 வாகன இலக்கத் தகடுகளில் மாகாண எழுத்துக்கள் பொறிக்கப்படுவதனால் ஒரு வாகனத்தின் உரிமையை மாகாணங்களுக்கிடையில் கைமாற்றம் செய்கின்றபோது மீண்டும் மீண்டும் புதிய இலக்கத் தகடுகளை அச்சிட வேண்டியுள்ளமை.

I. வாகன இலக்கத் தகடுகளில் மாகாண எழுத்துக்கள் பொறிக்கப்படுவதனால் ஒரு வாகனத்தின் உரிமையை மாகாணங்களுக்கிடையில் கைமாற்றம் செய்கின்ற போது புதிய இலக்கத் தகடுகளைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. இந்த எழுத்துக்களை பொறிப்பதனூடாக மேற்படி அச்சகத்தினர் ஈட்டுகின்ற இலாபத்தைத் தவிர வேறு எந்தவொரு தரப்பினருக்கும் நன்மைகள் கிடைப்பது அவதானிக்கப்படவில்லை. கடந்த 03 வருட காலப்பகுதிக்குள் மாத்திரம் இவ்வாறு மாகாணங்களுக்கிடையே கைமாற்றப்பட்ட 376,233 வாகனங்களுக்கான இலக்கத் தகடுகளுக்காக அச்சகத்தினருக்கு ரூ. 778,448,278 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

II. வாகனங்களை அடையாளம் காண்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த வானொலி அலைக்கற்றை தரவு அடையாள எழுத்துக்களைக் கொண்ட ஸ்ரிக்கர்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படாத காரணத்தினால், அவற்றை அச்சிடும் தனியார் நிறுவனத்திற்குக் கிடைக்கும் இலாபத்தைத் தவிர வேறு எந்தவொரு தரப்பினருக்கும் நன்மைகள் கிடைப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் 2019 திசெம்பர் மாதத்திலிருந்து 2020 ஓகத்து மாதம் வரையில் வழங்கப்பட்ட 302,192 ஸ்ரிக்கர்களுக்காக மேற்படி தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூ. 153,059,534 தொகையானது பயனற்றதாக மாறியுள்ளது.

3.15 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாத்தறைக் கிளையில் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதிலுள்ள முறைகேடுகள்.

I. சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய எழுத்துப் பரீட்சைகளுக்கு பட்டியலிடப்படாத 18 விண்ணப்பதாரர்கள் மற்றும் எழுத்துப் பரீட்சை தினத்தில் மேற்படி பரீட்சைக்கு தோற்றாத

காரணத்தினால் பரீட்சைக் குறிப்பு ஆவணத்தில் தோற்றவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்த விண்ணப்பதாரர் ஒருவரை எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்ததாக போலியான பெறுபேறுகளை உள்ளடக்கி மற்றும் எழுத்துப் பரீட்சையில் எதுவிதமான புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரரொருவரையும் பரீட்சையில் சித்தியடைந்ததாக போலியான பெறுபேற்றை உள்ளடக்கி ஆவணங்களை இற்றைப்படுத்தி செல்லுபடியான சாரதி அனுமதிப் பாத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

II. சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய செயன்முறைப் பரீட்சைகளுக்கு பட்டியலிடப்படாத 10 விண்ணப்பதாரர்களையும் செயன்முறைப் பரீட்சைகளுக்கு தோன்றாத காரணத்தால் பெறுபேற்று அட்டவணையில் சமூகமளிக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பதாரரையும், செயன்முறைப் பரீட்சை ஆவணத்தில் தொடர்புடைய பரீட்சையில் சித்தியடையவில்லை எனத் தகவல் உள்ளடக்கப்பட்ட ஒரு விண்ணப்பதாரரையும், செயன்முறைப் பரீட்சை ஆவணங்களில் எந்தவொரு குறிப்பும் இல்லாத ஐந்து விண்ணப்பதாரர்களை செயன்முறைப் பரீட்சைகளில் சித்தியடைந்ததாக போலியான தரவுகளை உள்ளடக்கி செல்லுபடியான சாரதி அனுமதிப் பாத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

III. சாரதி அனுமதிப் பாத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான எழுத்துப் பரீட்சைக்குத் தோன்றாத போதிலும் எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்ட நாளில் பயன்படுத்தப்படாத பரீட்சை சுட்டெண்களையும் போலியான பெறுபேறுகளையும் உள்ளடக்கி செல்லுபடியான சாரதி அனுமதிப் பாத்திரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பதாரரொருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளுக்கும் தோன்றாத நிலையில் மேற்படி பரீட்சைகளில் சித்தி பெற்றதாக போலியான தகவல்களை உள்ளடக்கி சாரதி அனுமதிப் பாத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

3.16 L பலகைகளைக் கொள்வனவு செய்தல்

I. மோட்டார் வாகனச் சட்டத்தின் அத்தியாயம் 203இற்கு அமைவாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமல் பயிற்சி பெறுபவர் தனியாக மோட்டார் வாகனத்தைச் செலுத்துவது சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்கு சாரதிப் பயிற்சிக்காக L பலகை வழங்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் அந்த L பலகைகளைப் பயன்படுத்தி வாகன ஓட்டப் பயிற்சிகளை செய்வதற்கு அனுமதியளிக்கப்படுவதில்லை. இருப்பினும் அனைத்து எழுத்துத்

தேர்வுகளிலும் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்கும் L பலகை வழங்குதல் மற்றும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதால், L பலகைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 162,495,000 அரச நிதியைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

II. திணைக்களத்தின் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் தரவுத்தளத்திற்கமைய ஒரு வருடத்திற்குள் வழங்கப்படும் புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 400,000 என்பதைக் கவனத்திற் கொள்கையில், இந்த பெறுகையினைப் பயன்படுத்தி அண்ணளவாக 3 வருட காலப்பகுதியினுள் வழங்கி முடிக்க முடியாத சுமார் 1,800,000 L பலகைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமையினூடாக அரச நிதியானது அவசியமற்ற விடயங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

3.17 புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

I. புகைப் பரிசோதனை வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பொறுப்பு உறுதியொன்றினூடாக தாபிக்கப்பட்ட புகைப் பரிசோதனை நம்பிக்கை பொறுப்பு நிதியமானது 17/1615/702/002-xvii ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மற்றும் 2017 ஓகத்து மாதம் 09ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தீர்மானத்திற்கமைய வெளியிடப்பட்ட 02/2018 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 03 மற்றும் 04ஆம் பந்திகளுக்கமைவாக 2018 ஆம் ஆண்டில் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை மூடிவிட்டு, அதன் பொறுப்புக்களை நிறைவு செய்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றிருந்த போதிலும் அமைச்சரவையின் அனுமதியோ, நிதி அமைச்சினது அல்லது திறைசேரியின் அனுமதியோ இன்றி நிரல் அமைச்சர் ஊடாக நிதியத்தின் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றி நிதியத்தை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

II. 01/2020ஆம் இலக்க மற்றும் 2020 ஓகத்து 28ஆந் திகதிய அரச நிதிச் சுற்றுநிருபம் (i) மற்றும் நி.பி. 876 (2) (அ) விற்கமைய தற்போதுள்ள நிதியங்கள் தொடர்ந்தும் செயற்படுதல் தேசிய தேவைப்பாடாக அடையாளம் காணுமிடத்து மற்றும் அந்த நிதியங்கள் தொடர்பில் உரிய வகையில் சட்டமொன்றினூடாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லையெனில், அந்த நிதியங்கள் இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு ஒரு வருட காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற போதிலும் அத்தகையதொரு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

3.18 குழுவின் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஏனைய விடயங்கள்

I. வாகனப் பதிவுகளின் மூலப்பிரதி ஆவணக்கோப்புக்கள் மற்றும் வாகன உரிமைமாற்ற ஆவணக் கோப்புக்கள் வேரஹெர அலுவலகத்தில் 18 கொள்கலன்களுக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை, மேற்படி கொள்கலன்களை மழையிலிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் கொள்கன்களுக்குள் களஞ்சியப்படுத்தியிருந்த ஆவணக் கோப்புக்கள் அழிவடைந்து காணப்பட்டன.

II. கணினித் தரவுகளை உள்ளீடு செய்யும் அனுமதியைக் கொண்டிருந்த பயனர்களுக்கிடையில் திணைக்களத்திலிருந்து வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற போதிலும் கடமை ஒப்படைப்பு ஆகிய காரணங்களால் பயன்படுத்தப்படாத கடவுச் சொற்களை பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது.

III. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களாகிய ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடவுச் சொல்லினைப் பயன்படுத்தி முன்பு பதிவு செய்யப்பட்ட வாகனமொன்றின் செசி இலக்கம் உள்ளிட்ட தரவுக் கட்டமைப்பிற்குள் உள்ள எந்தவொரு தகவலையும் மாற்றுவதற்கு அல்லது அழித்து விடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு அவ்வாறு மாற்றம் செய்யப்படும் கடந்தகால தரவுகள் எதனையும் மீளப் பெற முடியாதவாறு கட்டமைப்பினுள் முழுமையாக அழிவடைந்து செல்லும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

IV. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுகின்ற வாகனங்கள் பற்றிய தகவல்களை உண்ணாட்டரசிறைத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தகவல் பரிமாற்ற முறைமைக் கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டமானது 2018ஆம் ஆண்டுக்கு பிறகு செயலிழந்து காணப்பட்டமையினால் Informatics International (Ltd) நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூ. 2,420,000 தொகையானது பொருளாதார நன்மை பயக்காத ஓர் செலவாக அமைந்திருந்தது.

V. ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தின் உதவி ஆணையாளர் ஒருவரின் கடவுச் சொல்லை குற்றமுறையாகக் கையாண்டு 52 எழுத்துமூலப் பரீட்சாத்திகளையும் 09 செயன்முறைப் பரீட்சாத்திகளையும் சித்தியடையச் செய்து சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கியிருந்தமை தொடர்பில் முறையான விசாரணையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

VI. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 இன் பிரகாரம் பொருட்களை வாங்குதல் முறைமையின் கீழ் ரூபா 10 மில்லியன்களை விஞ்சிய பெறுகைகளுக்காக அமைச்சின் பெறுகைக் குழுவின் அனுமதி

பெறப்படுதல் வேண்டும் என்றிருந்த போதிலும் அமைச்சின் பெறுகைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தாமல் ரூபா 12 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியைக் கொண்ட, பதிவுச் சான்றிதழ்களை தபால் செய்யும் சாளரக் கடித உறைகள் அச்சிடுடவதற்கான பெறுகையானது திணைக்களத்தின் பெறுகைக் குழுவினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4. தற்போதைய செயலாற்றுகை

4.1 சாரதி அனுமதிப்பத்திர அச்சிடலுக்கு பயன்படுத்தப்படும் SRITIS கணினி மென்பொருளுக்கான பராமரிப்பு மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

உருவாக்கம், தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் ஒப்படைத்தல் (BOT) எண்ணக்கருவின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள SRITIS கணினி மென்பொருளானது அதன் மூலக் குறியீடுகளுடன் 2020ஆம் ஆண்டில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்படி மென்பொருளுக்கான பராமரிப்புச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத அதேவேளை, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்காக முறையான விலைமனுக்கோரல் எதுவுமின்றி கட்டமைப்பில் முறையே ரூ. 154,100,000 மற்றும் ரூ. 181,973,700 தொகைகளுக்கு மெட்ரோபொலிட்டன் நிறுவனத்திடமிருந்து பராமரிப்பு மற்றும் சேவைகள் பெறப்பட்டிருந்தது. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் வாகனப் பதிவு மற்றும் ஒப்படைப்பிற்குரியதான தரவுக் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்கான செலவினம் ரூ. 10,000,000 ஆக காணப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்துகையில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் தரவுக் கட்டமைப்பின் பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக பாரிய அசாதாரண அளவிலான செலவினை செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. சாரதி அனுமதிப்பத்திர மென்பொருளானது Face Technologies என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, மென்பொருளை உற்பத்தி செய்கின்ற காலப்பகுதியில் மெட்ரோபொலிட்டன் நிறுவனம் அதன் உள்ளூர் முகவராக செயற்பட்டிருந்த போதிலும் 2022ஆம் ஆண்டில் மேற்படி நிறுவனத்தின் உள்ளூர் முகவராக Softlogic நிறுவனத்தினை நியமித்திருந்தது. எவ்வாறெனினும், விலைமனுக் கோரல் செயற்பாடு எதுவுமின்றி மென்பொருள் தயாரிப்பாளர்களுடன் எதுவிதமான தொடர்புகளுமில்லாத நிறுவனமொன்றிற்கு மிக அதிகமான செலவில் மென்பொருள் பராமரிப்பு மற்றும் சேவைகளின் பொருட்டு வழங்குவதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் எதுவும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படும் அச்சு இயந்திரங்களின் சேவை மற்றும் பராமரிப்புகளுக்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல்

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இரண்டு அச்சு இயந்திரங்களின் பராமரிப்பு மற்றும் சேவைகளின் பொருட்டு எந்தவொரு பெறுகைச் செயற்பாடுமின்றி ரூ. 14,700,000 பெறுமதிக்கு தனியார் நிறுவனமொன்றுடன் சேவை ஒப்பந்தமொன்று செய்யப்பட்டிருந்தது. இந்த வகையிலான புதிய அச்சு இயந்திரமொன்றின் சந்தை விலை ரூபா 15 - 20 மில்லியன்களுக்கிடைப்பட்டதாக காணப்படுகின்றமையும் இவ்விரு அச்சு இயந்திரங்களின் சந்தைப் பெறுமதியானது பராமரிப்புச் செலவினை விடக் குறைவானதாக இருக்க முடியுமென்ற காரணத்தினாலும் பணத்திற்கான பெறுமதி எனும் எண்ணக்கருவில் இருந்து விலகி அரச நிதியை செலவு செய்து, ஏற்படுத்திக் கொண்டுள்ள இந்த சேவை ஒப்பந்தமானது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

4.3 சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் செயற்பாட்டினை தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைத்தல்

விடயம்சார்ந்த காரணி தொடர்பில் 2023 யூன் 12ஆம் திகதி MT/46/2023 ஆம் இலக்க அமைச்சரவை மற்றும் மேற்குறித்த விஞ்ஞாபனத்திற்காக பெறப்பட்ட அப/23/1098/608/041-11/ரீபிஆர் மற்றும் 2023 யூலை 04ஆம் திகதிய தீர்மானத்திற்கமைய மெட்ரோபொலிட்டன் நிறுவனத்துடன் 2023 செத்தெம்பர் 15ஆம் திகதி தொடக்கம் ஒரு வருட காலப்பகுதிக்கென ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி நடவடிக்கை மற்றும் ஒப்பந்தத்தை செயற்படுத்துதல் பற்றிய அவதானிப்புக்கள் பின்வருமாறு.

I. சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்காக எந்தவொரு பெறுகை செயல்முறையுமின்றி, ஒரே ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து மாத்திரமே விலை மனு கோரப்பட்டு, ஒரே ஒரு விலை மனு மாத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

II. சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதுடன் தொடர்பில்லாத செலவுகளை உள்ளடக்கி போலியான செலவு-பயன் பகுப்பாய்வு நடத்தப்பட்டிருந்த அதேவேளை, அமைச்சரவை முடிவின் படி பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்கள் செலவு-பயன் குழுவில் சேர்க்கப்படவில்லை.

III. 2022 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் கட்டளை பிறப்பிக்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரமொன்றின் செலவு ரூ.311ஆக இருந்த போதிலும், அதைப் பற்றி எந்த கவனமுமின்றி சாரதி அனுமதிப்

பத்திர அட்டையொன்றுக்காக ரூ. 576வையும் மற்றும் அச்சிடும் செலவையும் செலுத்துவதற்காக பரிந்துரைகளை வழங்கியதன் காரணமாக விலை பகுப்பாய்விற்காக நியமிக்கப்பட்ட குழு ஒப்படைக்கப்பட்ட கடமையை முறையாக நிறைவேற்றவில்லை.

IV. மேற்படி, அவதானிப்பின்படி, அரசாங்கத்திற்கு அட்டையொன்றால் ரூ. 265 நட்டம் ஏற்படும் வகையில் பரிந்துரைகள் வழங்கிய காரணத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து 2024 ஜூலை மாதம் வரை மெட்ரோபொலிடன் நிறுவனத்தினால் அட்டைகளை வழங்கி அச்சிடப்பட்ட 507,807 அட்டைகளுக்காக 134,568,855 ரூபாய் அதிகமாக செலுத்தியதனால் அரசுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது.

4.4 ஒரு நாள் சேவையின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுதல்.

I. ஒரு நாள் சேவையின் கீழ் வேரஹெர அலுவலகத்தினால் ஒரு நாளைக்கு 200 சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், அந்த 200 சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு மேலதிகமாக, முன்னர்போல் சாதாரண செயல்முறை மூலம் விண்ணப்பித்து சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுபவர்களுக்காக ஒரு நாள் சேவைக் கட்டணத்தைச் செலுத்தி ஒரு நாளைக்கு சுமார் 300 முதல் 400 சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளை அச்சிட வெரஹெரா நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. இந்த அட்டைகளைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட நபர்கள் டோக்கன்களைப் பெறாமை, அச்சிடப்பட்ட அட்டைகளைப் பெற உரிய நபர்கள் வந்தமைக்கான தகவல்கள் ஆவணப்படுத்தப்படாமை மற்றும் சாதாரண முறையின் மூலம் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றவர்களுக்கு வெரஹெர வளாகத்திக்கு வந்து ஒரு நாள் சேவையின் மூலம் சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளைப் பெற முடியுமென பொதுமக்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படாமை போன்ற விடயங்களை கருத்திற் கொண்டால் கடந்த 9 மாதங்களில் வழங்கப்பட்ட 61,177 அட்டைகள் 5,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறதென்பதோடு அதில் 1000 ரூபாய் வேரஹெர பணியாட்தொகுதியினறுக்கு வழங்கப்படுகிறதென்று பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் விமர்சனங்களை கணக்காய்வின் போது மறுக்க முடியாதுள்ளது.

II. நிலுவையில் உள்ள சாதாரண முறையின் மூலம் பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களில் ஒரு நாளைக்கு 200 முதல் 250 க்கு இடைப்பட்டளவு அட்டைகளை ஒரு நாள் சேவை கட்டணம் செலுத்தாமலும் ஆணையாளர் (சாரதி அனுமதிப் பத்திரங்கள்) மற்றும் துணை ஆணையாளர்களினால் அவசரத் தேவையாகவும் கருதி அச்சிட்டுத் தருமாறு அச்சுப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தனர். 2023 டிசம்பர் மாதம் முதல் 2024 ஆகஸ்ட் மாதம் வரை, 21,890 சாரதி அனுமதிப் பத்திரங்கள் இவ்வாறு அச்சிடப்பட்டன. மேற்படி ஒப்புதலை வழங்குவதற்கான காரணங்கள் ஆவணப்படுத்தப்படவில்லை என்பதோடு அதற்கான முறையான நடைமுறையொன்றும் அறிமுகப்படுத்தப்படவில்லை. எனவே, இம்முறையின் கீழும் மேற்படி அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகேடுகள் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகளை கணக்காய்வின் போது மறுக்க முடியாதுள்ளது.

4.5 சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளை கொள்வனவு செய்தல்.

I. தேசிய பெறுகை வழிகாட்டுதல் நியமத்தின் 3.1.1 (அ) இன் படி, உள்ளூர் ஒப்பந்தக்காரர்களின், வழங்குநர்களின் மற்றும் சேவை வழங்குநர்களின் திறன் வரையறுக்கப்பட்டுள்ளபோது மற்றும் சர்வதேச போட்டிமிக்க விலைமனு கோரல் சாதகமாக இருப்பது தெளிவாக இருக்கும்போது சர்வதேச போட்டிமிக்க விலைமனு கோரல் முறையைப் பயன்படுத்த வேண்டும். ஆயினும், சம்பந்தப்பட்ட பெறுகைக்குரிய பாதுகாப்பு அடையாளங்கள், தரச் சான்றிதழ்கள் மற்றும் QR குறியீடுகளுடன் கூடிய 100% பொலிகார்பனேட் அட்டைகளை தயாரித்து வழங்குவதற்கான திறன் உள்ளூர் வழங்குநர்களிடம் குறைவாக இருந்தபோது, சர்வதேச போட்டிமிக்க விலைமனு கோரல் முறையைப் பயன்படுத்தாது தேசிய போட்டிமிக்க விலைமனு கோரல் முறை பயன்படுத்தப்பட்டது.

II. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சராசரியாக மாதாந்தம் வழங்கும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் அளவு 90,000 அலகுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான வருடாந்த அட்டை தேவை 1,080,000 என்ற போதிலும் குறைந்தபட்சம் 06 மாதங்களுக்கேனும் தேவையான அட்டைகள் கொள்வனவு செய்யப்படாமல் வெறுமனே 400,000 அட்டைகளை மாத்திரமே கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

III. விலைமனு கோரல் ஆவணங்களிலுள்ள நிபந்தனைகளின்படி அட்டைகளில் உள்ளடங்கக்கூடியவைகளை ஒரு சுயாதீன ஆய்வகத்தில் பரிசோதிக்கப்பட வேண்டுமென்பதோடு, பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வழங்குநரிடமிருந்து பெறுகைக் கட்டளையை கொள்வனவு செய்ய வேண்டும். ஆயினும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அத்தகையதொரு சுயாதீன ஆய்வகச் சோதனையின்றி பெறுகைக் கட்டளையை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

IV. இதற்கு முந்தைய சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவத்தால் கொள்வனவு செய்து அச்சிடப்பட்ட சாரதி அனுமதிப் பத்திர அட்டையில் முக்கிய பாதுகாப்பு அடையாளங்கள் மற்றும் அச்சிடப்பட்ட விஷேட அம்சங்களின்றி பெறுகைச் செயன்முறை மூலம் கொள்வனவு செய்வதற்கு முன்மொழியப்பட்ட அட்டையின் பாதுகாப்பு அடையாளங்கள் தீர்மானிக்கப்பட்டன.

4.6 போக்குவரத்துச் சட்டங்களை மீறும் சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத குற்றங்களுக்காக அறவிடப்படும் அபராதத் தொகையை வசூலிக்கும் முறையையும், சாரதிகளுக்கு பாதகமான புள்ளிகள் வழங்கும் முறையையும் நடைமுறைப்படுத்தல்.

I. மேற்படி திட்டத்தில் உள்ளடக்கப்படும் துறைகள், அந்த உள்ளடக்களைக் கொண்ட பருமட்டான திட்டம், திட்டத்தின் படி உள்வாங்கப்பட வேண்டிய மென்பொருள், வன்பொருள், பிற உபகரணங்கள் உட்பட முழு திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் அளவுகள், அதேபோல் எதிர்பார்க்கப்படும் திட்டத்தின் மொத்த செலவு ஆகியவற்றை உள்ளடக்கிய அளவுப் பட்டியல் (BOQ) ஒன்றை தயாரிப்பதன் மூலம் திட்டத்தை சரியாக அடையாளம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

II. திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவாக ஒற்றைத் தாள் மதிப்பீடொன்றை சேர்த்துள்ளதோடு 685.6 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்ட செலவைக் கொண்ட அந்த ஆவணம், எந்தவொரு பொறுப்பான அதிகாரியின் கையொப்பமுமின்றி Lum Sum பெறுமதிகளைக் கொண்டிருந்ததுடன் அவைகளை ஆவணப்படுத்த

வழிவகுத்த தொழில்நுட்பத் தரவுகளின்றி வெறும் எண் குறிப்பாக தயாரிக்கப்பட்டிருந்தது.

III. இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்புபடும் காவல் நிலையங்கள் மற்றும் வாகனப்பிரிவு நிலையங்களுக்கு 650 Desktop கணினிகள், தரவு கண்காணிப்பு மற்றும் குறுக்கு பரிசோதனைகளுக்காக Web Login மற்றும் இணைய வசதிகளை வழங்குவது ஒரு அத்தியாவசிய அங்கமாக இருந்தபோதிலும் அந்த உபகரனங்களை உள்ளடக்காமல் கருத்திட்டத்திற்கான விலைமனு கோரல் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

IV. கருத்திட்டத்திற்கான ஒப்புதலைப் பெறுவதற்கு முன்பு, இக்கருத்திட்டத்தின் வெற்றிகரமான விலைமனுதாரராக தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டு முயற்சியொன்றின் பங்குதாரரான மெட்ரோபொலிடன் நிறுவனத்திடம் கருத்திட்டத்திற்கான தொழில்நுட்ப தீர்வொன்றை சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்தெரிவித்திருந்தார். அதன்படி, மேற்படி நிறுவனம் 2023ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03ஆந் திகதி இக்கருத்திட்டத்திற்கான திட்ட அறிக்கையொன்றை சமர்ப்பித்ததோடு இச்செயலின் காரணமாக, வெளிப்படைத்தன்மையுடன் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சவாலுக்குட்படுத்தப்பட்டது.

V. கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் கட்டணம் வசூலிக்கக்கூடிய, முறைமையுடன் இணையக்கூடிய வசதிகளைக் கொண்ட 5000 உபகரணங்கள் (End User mobile Device) தேவையென இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டபோதிலும் அடிப்படைச் செலவு மதிப்பீட்டின்படி அத்தகைய உபகரணங்களின் எண்ணிக்கை 2500 என அடையாளம் காணப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கருத்திட்டத்தின் அடிப்படை உபகரணங்கள் மற்றும் கருத்திட்டத்தில் அதிக செலவு கொண்ட அந்த உருப்படியின் இயல்பு, அவசியமான தரப் பண்புகள் மற்றும் கருத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய உபகரணங்களின் எண்ணிக்கை ஆகியவை விலைமனு தொடர்பான ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

VI. கருத்திட்டங்களை வகுக்கும்போது, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செலவு ரூ.240 மில்லியன் உட்பட கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.685.6 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு கொடுக்கல் வாங்கலொன்றுக்காக ரூ.254 செலுத்த வேண்டியேற்பட்டமை மற்றும் வருடமொன்றுக்கு 1.5 மில்லியன் கொடுக்கல் வாங்கல் சான்றிதழை வழங்கியமையின் காரணமாக, உடன்படிக்கை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள 05 வருட காலப்பகுதிக்காக கருத்திட்டம் மூலம் ரூ. 1905 மில்லியன் (ரூ. 254 x 1,500,000 x 5) என்ற அதிகூடிய தொகையை செலுத்த வேண்டி ஏற்படுமென அவதானிக்கப்பட்டது.

VII. தொழில்நுட்ப விலைமனு மதிப்பிட்டின்போது 70 புள்ளிகளை விட அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் மூவருடையதில் ஆகக் குறைந்த விலை குறிப்பிடப்பட்ட விலைமனுவின் பெறுமதி ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு ரூ.254.70 என்பதுடன், தொழில்நுட்ப புள்ளிகள் மற்றும் நிதி புள்ளிகளின் மொத்தம் ஊடாக வெற்றிகரமான விலைமனுதாரராக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரருடைய விலைமனுவின் பெறுமதி ரூ. 289.15 ஆகும். பின்னர் வெற்றிகரமான விலைமனுதாரருடன் கலந்துரையாடி, விலைமனுவின் பெறுமதியை ரூ.254வரை குறைப்பதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு தீர்மானித்தது. தொழில்நுட்ப மதிப்பிடலில் சித்தியெய்திய சகல விலை மனுதாரர்களுக்கும் நிதிசார் விலை மனு பெறுமதியை திருத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்காமையின் காரணமாக விலை மனு கையளித்தலின் வெளிப்படைத்தன்மை சவாலுக்கு உட்படுத்தப்பட்டது.

4.7 சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்கல்

I. சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் ஆணையாளர் நாயகத்தால் குறித்த பணிக்காக நியமிக்கப்படும் அதிகாரம் பெற்ற அலுவலரால் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் சோதனையிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளபோதும் சாரதி பணியை மேற்கொள்ள அவசியமான விண்ணப்பதாரிகளின் பௌதீக அவயவங்கள் உரிய முறையில் இயங்குகின்றனவா (உதாரணம் :

கைகள், கால்கள், கண்கள் உரிய முறையில் இயங்குகின்றனவா) என்பது தொடர்பான சோதனையின்றி விண்ணப்பதாரி இல்லாமலேயே இலங்கை ஒட்டோ மொபைல் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

II. இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் 2301/17 இலக்க மற்றும் 2022.10.10 திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் மோட்டார் வாகனச் சட்டத்தின் 203வது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிக்கு அமைவாக சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரமொன்றை வழங்கும் சாதாரண சேவை கட்டணம் ரூ. 3,000 மற்றும் ஒரு நாள் சேவைக் கட்டணம் ரூ. 3,500 ஆவதுடன் அக்கட்டணம் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தால் அறவிடப்பட வேண்டும். எனினும் அதற்கு முரணான வகையில் இலங்கை ஒட்டோ மொபைல் சங்கத்தால் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரமொன்றுக்காக ரூ. 10,394 அறவிடப்பட்டுள்ளதுடன் சாரதி அனுமதிப் பத்திரமொன்றுக்காக ரூ. 7,394 சட்ட விரோதமான கட்டண அறவிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2023 மற்றும் 2024 வருடங்களில் ரூ. 527,305,864 அவ்வாறு சட்டத்திற்கு முரணாக வகையில் அறிவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

III. மோட்டார் வாகனச் சட்டத்தின் 132(ஆ) பிரிவுக்கு அமைவாக வியானா சமவாய ஒப்பந்தத்திற்கு உட்பட்ட அரசுகளால் வழங்கப்பட்ட செல்லுபடியான சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்திரச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரமாக கருதப்படுதல் வேண்டும். சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரமொன்றைக் கொண்ட நபரொருவருக்கு மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எவ்வித தடையுமின்றி இலங்கைக்குள் அனுமதிப் பத்திரமுடைய வகுப்பைச் சார்ந்த மோட்டார் வாகனங்களை செலுத்த முடியும். எனினும் இலங்கை ஒடோ மொபைல் சங்கம் எவ்வித சட்டரீதியான அடிப்படையோ அல்லது அதிகாரமோ இன்றி இலங்கைக்கு வருகை தரும் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்ட விருந்தினர்களிடமிருந்து ரூ. 8,466 அறவிட்டு Recognition permit என்ற பெயரில் சட்டத்திற்கு முரணான வகையில் வாகன அனுமதிப் பத்திரமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

4.8 வாகனங்களை இனங்காணும் இலக்கமுடைய தகடுகளை வழங்கும் ஒப்பந்தத் தொகையை திருத்தல்

I. சர்வதேச போட்டி விலைகளை கோரும் முறையில் விலை மனு கோரி ஒப்பந்தத்தை கையொப்பமிட்டுள்ள, செயற்படு நிலையிலுள்ள ஒப்பந்தமொன்றுக்காக டொலருக்கு செலுத்தப்படும் இலங்கை ரூபாவின் அளவில் ஏற்படும் மாற்றத்திற்கிணங்க ஒப்பந்த தொகையை திருத்துவதற்குரிய ஏற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. அதற்கமைவாக இவ்விலைத் திருத்தம் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது.

II. இலங்கை அரசாங்கம் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்கள் கையொப்பமிட்டு நடத்திச் செல்லும் செயற்படுநிலையிலுள்ள இவ்வாறான வேறு ஒப்பந்த உடன்படிக்கைகளுக்காக டொலருக்கு செலுத்தப்படும் ரூபாவின் பெறுமதி வேறுபடும் என்ற சித்தாந்தத்தை கவனத்திற் கொண்டு அவ்வொப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விலைகள் திருத்தப்பட்டுள்ளனவா அல்லது திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை கவனத்திற் கொள்ளாமல் இவ்வொப்பந்தத்தின் விலைத் திருத்தங்களை நியாயப்படுத்தும் வகையில் விலைகளை கலந்துரையாடும் குழுவொன்றை (CANC) நியமிக்குமாறும், அக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக கருத்திட்ட குழுவொன்றை நியமிக்குமாறும் கோரி கௌரவ போக்குவரத்து அமைச்சரால் 2022ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அ/ப/22/1104/608/010 இலக்க 2023ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டது.

III. ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட கருத்திட்ட குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆந் திகதி மேற்குறிப்பிட்ட குழு அறிக்கை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விலைகளை கலந்துரையாடும் குழுவுக்கு (CANC) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வழங்குனரின் விலைகளை தீர்மானிக்கும் ஏனைய விடயங்கள் தொடர்பான மதிப்பிடலின்றி செலாவணி வீதத்தின் மாற்றங்களை மாத்திரம் கருத்திற் கொண்டு குழு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் செலாவணி வீதத்தின் மாற்றங்கள் ஊடாக வழங்கல் உருப்படியின் விலைகள் மீதான தாக்கத்தை கணிப்பிடாது

வழங்குனருடன் கலந்துரையாடி உடன்படும் விலைத் திருத்தத்தை மேற்கொள்ளது பொருத்தமானதென தீர்மானித்ததன் காரணமாக கருத்திட்ட குழு தனது கடமையை உரிய முறையில் நிறைவேற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

IV. அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், ஒப்பந்த நிபந்தனை இலக்கம் 30இற்கு அமைவாக விலைத் திருத்தமொன்றை மேற்கொள்வதற்காக உடன்படிக்கையில் சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பாக 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 09ஆந் திகதி DMT/11/DE/02ஆம் இலக்க கடிதம் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் சட்டத்துறை தலைமையதிபதியிடம் வினவியதுடன் “எவ்விதமான சட்டரீதியான ஏற்பாட்டையும் குறிப்பிடாமல் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள், உடன்படிக்கையின் 30வது பிரிவுடன் உள்ளடக்கப்பட்ட விடயப்பரப்புக்குரியதன்று” என சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம் சுட்டிக்காட்டியது. எனினும் சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தின் அபிப்பிராயத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளாமலும், அமைச்சரவையின் அங்கீகாரமின்றியும் விலைத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஏதுவான முறையில் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரிவுகளை திருத்தி, 62.5% விலை அதிகரிப்பை வழங்கக் கூடிய வகையில் ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையின் 14வது பிரிவை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

V. அ/ப 22/1104/608/010 இலக்க மற்றும் 2023ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக வாகன இலக்கத் தகடுகளை பெற்றுக் கொள்வதற்காக ஒரே வழங்குனர் மீது நீண்ட காலமாக தங்கியிருப்பதற்குப் பதிலாக போட்டித் தன்மையான பெறுகை நடைமுறையொன்றை பின்பற்றி அரசாங்கத்திற்கு பொருளாதார ரீதியாக நன்மை பயக்கக் கூடிய விலைகளை சமர்ப்பிக்கும் வழங்குனர் ஒருவரை இனங்காணும் இயலுமை தொடர்பாக தேடிப்பார்க்குமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கி ஒன்றரை வருடம் கடந்துள்ளதுடன் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்து எட்டு மாதம் கடந்துள்ளபோதும் தகுதி வாய்ந்த வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

இணைப்பு – III

2025 மார்ச்சு 10ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது கண்டறியப்பட்ட பிரச்சனைகள், அவதானிப்புகள், விதப்புரைகள் / கட்டளைகள்

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2020, 2021, 2022 மற்றும் 2023ஆம் வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கை மற்றும் தற்போதைய செயல் நிறைவேற்றம் மீதான விசாரணை) **விசாரணை மேற்கொள்ளப்பட்டத் திகதி – 2025 மார்ச்சு 10**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு ❖ மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்		
கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்		**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) ஆகியோரின் விளக்கங்கள், குழுவின் அவதானிப்புகள் / விதப்புரைகள் / கட்டளைகள்**
01.	அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் 2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட முன்னறிவித்தலுக்கு அமைவாக, சுங்கக் கணனி முறைமையுடன் இணைப்பதற்கு முன்னர் இடம்பெற்ற சட்டவிரோத வாகனப் பதிவு செய்தல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் முன்வைக்கப்பட்ட 25 விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் அச்செயற்பாட்டிற்கு பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் உட்பட தற்போதைய நிலையை வெவ்வேறாக குறிப்பிட்டு விபரமான அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பித்தல்.	இவ்விடயம் சம்பந்தமாக: • 2019.11.04ஆந் திகதி மற்றும் 2020.12.17ஆந் திகதி அரச கணக்குகள் பற்றிய குழுவின் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை; • நிறுவனத்திற்குள் அதிகளவான ஆவணப் பரிமாற்றம் நிகழ்வதாலும், கோப்புக்களை பராமரிப்பதிலும் மற்றும் முகாமைத்துவம் செய்வதிலும் பாரிய சிக்கல் நிலவுவதாலும் அவ்வறிக்கை நீங்கலாக, ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான திட்டவட்டமான தகவல்களை திணைக்களத்தின் கோப்புக்கள் ஊடாக கண்டறியமுடியாமை மற்றும் • இச்சம்பவம் தற்போதைய கணக்கீட்டு அலுவலர் (க.அ.) திணைக்களத்திற்கு சேவை இணைப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்தது என்பதையும்;

		திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.) குழுவிடம் தெரிவித்தார். அதன்போது இக்கணக்காய்வு உசாவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 06 வருடத்திற்கு அதிகமான காலம் கடந்துள்ளபோதும் அது தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான அறிக்கையொன்றை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துவதற்கு முடியாமல் போனமை குறித்து கவனம் செலுத்திய குழு: • இது தொடர்பாக மேலும் விடயங்களை ஆராய்ந்து இந்த விடயத்துடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளடங்கலாக விபரமான அறிக்கையொன்றை அடுத்த குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்குமாறும்; • அடுத்தகுழுக் கூட்டத்திற்கு வருகைத்தரும் போது ஏற்புடைய அனைத்து கோவைகளையும் பரிசீலனை செய்து போதிய தயார்நிலையுடன் குழுவிற்கு வருகைத் தருமாறும்; மற்றும் • அடுத்த குழுக் கூட்டத்திற்கு மேற்கூறப்பட்ட அறிக்கையுடன் தொடர்புடைய காலப்பகுதியில் கடமையாற்றி தற்போது இடமாற்றம் பெற்றுள்ள ஆணையாளர் நாயகங்களையும் அழைக்க வேண்டும் எனவும்; போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் க.அ. இற்கு விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பி.க.அ. இன்

		MT/04/12/02/01-2023 இலக்கமுடையதும் 2025.03.19ஆந் திகதிய அறிக்கையின் மூலம் மேற்கூறப்பட்ட 25 விடயங்கள் தொடர்பாக திணைக்களத்தினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் குழுவிற்கு வழங்கப்பட்டிருப்பினும் குறித்த முழுமையற்ற அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதி குழுவிடம் தெரிவித்தார்.
02.	மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் கோவைகளை பேணுவதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் உள்ள குறைபாடுகள்	திணைக்களத்தில் இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் காணப்படும் கோவைகளை பேணுவதிலும் அவற்றை முகாமைத்துவம் செய்வதிலுமுள்ள குறைபாடுகளுக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ள இ-மோட்டார் கட்டமைப்பை செயற்படுத்துவதில் காணப்படும் தாமதம் தொடர்பாக குழுவினால் வினவப்பட்ட போது, • இ - மோட்டரிங் கட்டமைப்பை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் • ஏற்புடைய சேவை வழங்கும் நிறுவனத்துக்கு தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 10 000 சதுர அடி இடவசதியினை வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மேற்படி நடவடிக்கை நாளுக்கு நாள் தள்ளிப்போனதெனவும் • இறுதியில் அந் நடவடிக்கைக்கு இடவசதிகள் கண்டறியப்பட்ட போதிலும் இன்றளவில் சேவை வழங்கும் நிறுவனத்துடன் விலை விபரங்கள் தொடர்பான பிரச்சினைகள் எழுந்துள்ளதால் மேற்படி அதிகரிக்கப்பட்ட விலை விபரங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனவும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் க.அ. குழுவிற்கு தெரிவித்தார். ஆகவே, மேற்குறிப்பிட்ட இலத்திரனியல்

		கோப்புகளை பராமரிக்கும் கட்டமைப்பை தாமதியாது மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் நடைமுறைப்படுத்த வேண்டுமென குழு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கும் விதப்புரை வழங்கியுள்ளது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் பி.க. அ இன் 2025.03.19 ஆம் திகதிய MT/04/12/02/01 – 2023 ஆம் இலக்க அறிக்கையில், இக் கருத்திட்ட ஒப்பந்தம் இதுவரை செல்லுபடியான போதிலும், கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்பதால் கட்டமைப்பை செயற்படுத்தும் உறுதியானதொரு திகதி இல்லை என குழுவிற்கு அறிவித்துள்ளது.
03.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2023.09.12 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட விஷேட கணக்காய்வு அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக திணைக்களம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக மேற்கொண்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளிட்ட தற்போதைய நிலைமை.	இந்த விடயம் தொடர்பாக: • எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசாரணைக் குழுவொன்றை 2023 ஆம் ஆண்டில் திணைக்களம் நியமித்துள்ளதாகவும்; • குறித்த குழுவின் அலுவலர்கள் இடமாற்றம் பெற்று திணைக்களத்தை விட்டுச் சென்றுள்ளதால், 2024 ஆகத்து மாதம் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டதெனவும்; • விசாரணைக் குழுவின் விதப்புரைகளின் அடிப்படையில் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 281 வாகனங்களையும் இன்றளவில் கறைநிரற்படுத்தி வருமான வரி அனுமதிப்பத்திரம் பெறுவதைத் தடைசெய்துள்ளதாகவும்; • விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மாகாண சபைகளின் தரவுகளைப் பதிவேற்றலின் போது இரண்டு

		கட்டமைப்புக்களினதும் தகவல்கள் பொருந்தாமையின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளதாக நம்புவதால், உரிய தகவல்களை மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரின் தரவுக் கட்டமைப்புடன் ஒப்பீடு செய்வதன் மூலம் குறித்த வேறுபாடுகள் வெளிக்கொணரப்பட்டு வருவதாகவும்; • அவ்வாறான யாதேனும் வேறுபாடுகள் வெளிக்கொண்டு வரும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களின் ஆரம்பக் கோப்புகளை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுடன், பௌதீக அடிப்படையிலான சோதனைகள் மேற்கொள்கொள்ளப்படுமெனவும்; மற்றும் • எவ்வாறாயினும் இது வரையிலும் எந்தவொரு அலுவலரிடமிருந்தும் வாக்குமூலம் பதியப்படவில்லை எனவும்; மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் க.அ. மற்றும் விசாரணைக் குழுவின் தற்போதைய தலைவரால் குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. • இக்கணக்காய்வு அறிக்கையில் 281 வாகனங்கள் தொடர்பாக இடம்பெற்றுள்ள முறைகேடுகள் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவ்வனைத்து முறைகேடுகளும் தரவுப் பதிவேற்றலின் குறைபாடாக தெரிவிக்கும் கூற்றை உண்மை என ஏற்க முடியவில்லை எனவும் மேற்படி முறைகேடுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரவுகளை உள்ளடக்கிய உத்தியோத்தர்களின் கடவுச் சொல் கணக்காய்வு வினாவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கையில், திணைக்களமானது இதுவரையில் எந்தவொரு குறிப்பிட்ட உத்தியோகத்தரிடத்திலும்

		வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளாது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படும் விடயங்களை மீளாய்வு செய்வது அநாவசியமாக காலத்தை வீணடிக்கும் செயலாகும் என்பதை வலியுறுத்திய குழுவானது, இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தரவுகள் மற்றும் இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட தரப்பினர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடப்படும் அறிக்கையை எதிர்வரும் குழுவில் முன்வைக்குமாறும், • குறிப்பிட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டு அது பற்றி அறிக்கையிடுவதற்கு தாமதித்தமை தொடர்பில் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை குழு உத்தியோகத்தர்களும் பொறுப்புக் கூற வேண்டுமென்பதனால் அவர்களையும் எதிர்வரும் குழு முன்னிலையில் அழைக்குமாறும், மற்றும் • குறிப்பிட்ட விசாரணை தொடர்பில் தகவல் அறிந்த உத்தியோத்தர்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் இருப்பார்களேயாயின், அந்த உத்தியோத்தர்களையும் எதிர்வரும் குழுக் கூட்டத்துக்கு அழைக்குமாறும், குழுவானது மோட்டார் வாகன திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விதப்புரைகளை முன்வைத்தது.

இணைப்பு - IV

2025 மார்ச் மாதம் 21ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள், அவதானிப்புக்கள், பரிந்துரைகள்/ பணிப்புரைகள்

<table>
<tr><td colspan="3" align="center">மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
(கணக்காய்வாளர் தலைமையதிபதியின் 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளின் மதிப்பாய்வு மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்த மதிப்பாய்வு)
விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025 மார்ச் 21</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் –
❖ போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
❖ மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்</td></tr>
<tr><td colspan="2">கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்</td><td>▪ பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.அ.) /கணக்கீட்டு உத்தியோகத்தரின் (க.அ.) விடய தெளிவுபடுத்தல்,
▪ குழுவின் அவதானிப்புக்கள்/பரிந்துரைகள்/பணிப்புரைகள்</td></tr>
<tr><td>01.</td><td>கணக்காய்வு வினா மூலம் 2014ஆம் ஆண்டு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுளள, எனினும் 2019ஆம் ஆண்டு வரை பதில் கிடைக்கப்பெறாத, “மத வழிபாட்டிடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமங்களைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ள 158 வாகனங்களினது உரிமப்பத்திரதார்களின் பெயர்கள் அல்லது உரிமம் தொடர்பான உரிமை மாற்ற நிபந்தனைகளை மாற்றியவாறு வாகனங்களை பதிவு செய்திருத்தலும் 120 வாகனங்களின் உற்பத்தி</td><td>இங்கு தகவல்களை முன்வைத்த மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தற்போதைய க.அ, 2014 ஆம் ஆண்டு பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இரண்டு முறையான ஒழுக்காற்று விசாரணைகளில், குற்றம் சாட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்யத் தேவையான கோப்புகள் மற்றும் தகவல்கள் காணப்படாமையால், அந்த இரண்டு அதிகாரிகளும் ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து குற்றமற்றவர்களென அறிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்றும், அந்தக் காலகட்டத்துடன் தொடர்புடைய கோப்புகள் மற்றும் தகவல்களைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமம் இந்த விசாரணைகளை நடாத்துவதற்கு மிகப்பெரிய தடையாக உள்ளதாக குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.
இங்கு தகவல் தெரிவித்த 2020 மார்ச் தொடக்கம் 2022 ஆகஸ்ட் வரை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் முன்னாள் க.அ, தனது பதவிக் காலத்தில், இந்த 25 விடயங்கள் தொடர்பான தகவல்களை வெளிக்கொணரத் தேவையான 118 கோப்புகளை அவை சேமித்து</td></tr>
</table>

	வருடத்தை மாற்றியவாறு பதிவுசெய்யப்பட்டிருத்தலும்" என்ற விடயத்தினையும் உள்ளக்கியதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முன்னைய 25 பரிந்துரைகளில் உள்ளடங்கி உள்ள விடயங்களை, 2019.10.23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலும் விசாரணைக்கு உட்படுத்தி, அக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இதுவரை நேர்மறையான நடவடிக்கை மேற்கொள்ளாமை.	வைக்கப்பட்டிருந்த 12 கொள்கலன்களிலிருந்து கண்டுபிடித்ததாகவும்,கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நிதிக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (FCID) கணனி தடயவியல் பிரிவிற்கும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் தனித்தனியாக இரண்டு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் திணைக்களத்தின் தரவு தளத்தின் மேலதிக பாதுகாப்பிற்காக இரட்டை கடவுச்சொல் (Dual Password) பாதுகாப்பு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நேர்மறையான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்காது, அத்துடன் அவை தொடர்பில் குழுவிற்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல், 2014ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணையொன்றின் விடயங்களை சமர்ப்பித்ததன் ஊடாக குழுவை தவறாக வழிநடத்தியமை, குறித்த 25 விடயங்கள் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் திருப்தியளிக்காமை மற்றும் ஆவணங்கள் காணாமல்போனமை அல்லது தகவல்களை திரட்டிக்கொள்ள முடியாமை என்ற அடிப்படையில் மோசடியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நீண்டகாலமாக திணைக்கள மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை அல்லது உத்தியோகத்தர்களை ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து விடுவித்தல் முதலியவற்றை அவதானித்த குழு: • ஓய்வுநிலை நீதிபதிகள், கணக்காய்வாளர் தமைமையதிபதி திணைக்களத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி மட்டத்திலான ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள் மற்றும்/ அல்லது

		ஓய்வுநிலை அரச ஊழியர்கள் அடங்கிய, மூவர் அல்லது ஐவர் கொண்ட சுயாதீன விசேட விசாரணை ஒழுவொன்றை நியமித்து இவ்விடயம் தொடர்பில் முழு விசாரணையொன்றை நடத்துமாறும்; மற்றும் • இவ்விசாரணை குழுவின் விதப்புரைகளின் படி குறித்த குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான முதன்மை விதப்புரைகள். குற்றப்பத்திரிகைகள் சகிதம் சமர்ப்பித்து உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்; போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பி.க.அ.கும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ.இற்கும், இவ்விடயம் தொடர்பில் 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திணைக்கள மட்டத்திலான விசாரணையில் அப்போதைய க.அ. குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் சமர்ப்பித்த 118 ஆவணக் கோப்புக்கள் தொடர்பாக விசாரணை அறிக்கையைப் பெற்றுக் கொண்டு மேற்படி விசாரணையின் முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுமாறும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. இற்கும் விதப்புரை வழங்கப்பட்டது.
02.	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2023.09.12 ஆம் திகதிய விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களுக்கு எதிராக திணைக்களம் மேற்கொண்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கையின் முன்னேற்றம்	இந்த விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளவென நியமனம் செய்யப்பட்ட விசாரணைக் குழுவினால் இதுவரை எந்தவொரு வெற்றிகரமான விசாரணையும் மேற்கொள்ளப் படவில்லை என்பதையும், இதுவரை எந்தவொரு அலுவலரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்பதையும் அவதானிப்புச் செய்த குழு: • இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் சுயாதீன

		அலுவலர்களை உள்ளடக்கிய விசேட விசாரணைக் குழுவிடமே பொறுப்பளிக்குமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. இற்கும்; மேற்படி நடவடிக்கைக்கு திணைக்களத்தினுள் நியமனம் செய்யப்பட்ட விசாரணைக் குழுவுக்கு இரண்டு தடவைகள் நியமனம் செய்யப்பட்ட அலுலவர்கள் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய குழுவின் செயற்பணியை நிறைவேற்றாமை தொடர்பாக மேற்படி அலுவலர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு மூன்று வாரங்களுக்குள் குழுவுக்கு அறிக்கையிடுமாறும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் பி.க.அ. இற்கும் விதப்புரை வழங்கப்பட்டது.
03.	அவி/16/1307/709/061 ஆம் இலக்க 2016 செப்தெம்பர் 07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய சட்டபூர்வமான சுங்க நடவடிக்கைமுறை இன்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கில்களை, அவற்றின் எரிபொருள் கொள்ளளவை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு உட்பட்டு பதிவு செய்யும் போது இடம்பெற்றுள்ள முறைகேடுகள்.	மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலர்கள் மேற்படி அமைச்சரவை தீர்மானத்தை மீறி குறைந்த மிகைக் கட்டணத்தை அறவிட்டதன் மூலம் 298 மோட்டார் சைக்கில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், இதற்கு மேலதிகமாக குறித்த காலஎல்லையின் பின்னர் 3088 மோட்டார் சைக்கில்கள் அங்கீகாரம் இன்றி பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதையும், இந்த நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படுகின்ற அலுவலர்கள் 15 பேர் ஏற்கனவே திணைக்களத்தின் விசாரணைகளின் போது இனங்காணப்பட்டுள்ளார்கள் என்பதையும் அவதானிப்புச் செய்த குழு; ஏற்கெனவே அலுவலர்கள் 15 பேர் இனங்காணப்பட்டுள்ள இந்த விசாரணையை, ஏனைய விசாரணைகளுடன் சம்பந்தப்படுத்தாது சுயாதீனமாக நடாத்தி அது தொடர்பான அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. இற்கு விதப்புரை வழங்கப்பட்டது.
04.	2020,2021,2022 மற்றும் 2023 ஆம் நிதியாண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கிய விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை மீளாய்வு	திணைக்களம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2020,2021,2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கிய 18 விடயங்கள் மற்றும் 8 விடயங்கள் தொடர்பில் முறையே ஆராய்ந்த குழு அதில் குறிப்பிடப்பட்ட பல விடயங்களூடாக பாரிய நிதி மோசடிகள் மற்றும் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக கருதியதன் காரணமாக: • மேற்படி ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில்

		பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளை அவசியம் நிறுவனத்தினூடாக மேற்கொள்ள வேண்டும் என்பதால் அதற்கென பொருத்தமான ஒழுக்காற்றுக் குழுக்களை நியமித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவ்வொழுக்காற்று நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை மாதாந்தம் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் பி.க.அ.க்கு மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ.க்கும்; • இந்நிறுவனத்தை மாதாந்தம் குழுவின் முன்னிலையில் வரவழைத்து நிறுவனத்தினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தைப் பரீட்சித்துப் பார்த்தல் வேண்டுமெனவும் இது தொடர்பில் இடம்பெற்றுள்ள குற்றவியல் காரணிகள் தொடர்பில் பாராளுமன்றத்தின் ஊடாக உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களைத் தெளிவுபடுத்தி சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழுவின் செயலாளருக்கும் விதப்புரை வழங்கப்பட்டது.
05.	சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள்	சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் மோட்டார் வாகன சட்டத்திற்கு இசைவாகாத சட்டரீதியான அடிப்படையற்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது என்பதனை அவதானித்த குழு: • சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் பிரதான விசாரணையொன்றினை மேற்கொண்டு அந்த அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் க.அ. விதப்புரை வழங்கப்பட்டது.
06.	குழுவின் பொது விதப்புரைகள்	• திணைக்களத்தில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு தவறாளிகளுக்கு அரசாங்க நிறுவனங்களில் தற்போதுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை முறைகளுக்கமைவாகத் தண்டனைகளை விதிப்பது கட்டாயம் என்பதுடன்

		அதற்குரிய ஒழுக்காற்று அலுவலரால் ஒழுக்காற்று விசாரணைகள மேற்கொள்வது கட்டாயம் எனவும்; • அனைத்துத் திணைக்களச் சோதனைகளுக்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் பி.க.அ உடைய சாதகமான தலையீடும் மேற்பார்வையும் இருத்தல் வேண்டும் எனவும்; • ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் குற்றவியல் தவறுகள் தொடர்பாக நாட்டிலுள்ள சட்டத்திற்கமைவாக நீதிமன்ற நடவடிக்கை ஊடாகத் தண்டனை வழங்கப்படல் வேண்டும் எனவும்; • கணக்காய்வு அறிக்கைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள மற்றும் குழுவின் முன்னிலையில் தெரியவரும் குற்றவியல் தவறுகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் பிரேரணையொன்றை நிறைவேற்றுவதன் மூலம் குறிப்பிட்ட அறிக்கையைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்திச் சட்டத்தை வலுவுறுத்தும் நிறுவனங்கள் மூலமாக தவறாளிகளுக்குத் தண்டனைகளை விதிக்க வேண்டும்.